Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 | கதிர் : 71 | தை 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை 07 பெப்ரவரி 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

## செயற்குழு ஒத்திவைப்பு

### சஜித் அணி கொதிப்பு

கொழும்பு, பெப். 7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையைமான சிறிகொத் தாவில் நேற்று நடைபெற இருந்த கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையி லான புதிய அரசியல் கூட்டணி மற்றும் அதன் நிர் 05

## திருமலையிலும் இராணுவ ஆட்சி

திருகோணமலை, பெப். 7

திருகோணமலை மாவட் டச் செயலாக முன்னாள் இராணுவ மேஜர் ஜென ரல், ருவான் குலதுங்கவை நியமிக்க அரசு தீர்மானித் துள்ளது.

முன்னதாக திருகோண மலை மாவட்டச் செயலா கக் கடமைபுரிந்த புஷ்ப குமார சேவையிலிருந்து ஓய்வுபெற்று சென்றதை யடுத்து மேலதிக 23

# கோத்தாவின் கொடுங்கோல் ஆட்சி



### நாடாளுமன்றத் தேர்தலில் தக்கபாடம் புகட்டப்படும் என்கின்றார் சந்திரிக்கா

கொழும்பு, பெப்ரவரி 7

இலங்கையின் தற்போதைய ஆட்சி, ராஜபக்ச சகோதரர்களின் கொடூர அராஜக ஆட்சி. இதை நான் வெளிப்படையாகத் துணிவுடன் சொல்கின் றேன். இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க. 23

## 100 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 7

100 கிலோகிராம் கஞ்சா நேற்று வல்வெட்டித்துறையில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

சங்கானை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சஞ்சை சிறீ மன்ன தலைமையிலான குழுவி னர் பொதிசெய்த 23

*முச்சந்தி முரளி*



"சனமான சனமெல் லாம் பிரச்சனை தீரேலையெண்டு அழுகுதாம் உந்தக் கோதாரி விழுவான்களுக்கு ராக்கிங் கேக்குதாம் இப்ப...."

## பாலியல் 'ராக்கிங்' விசாரணை இன்று!

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தின் கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் இடம்பெற்ற தாக இணையத்தளங்களில் வெளி யாகியுள்ள பாலியல் ரீதியான வக்கி ரத்துடன் கூடிய 'ராக்கிங்' விவகாரம் தொடர்பில் பல்கலைக் 05

## தேர்தல்களை இலக்குவைத்தே மாவட்டச் செயலர்கள் மாற்றம்

### சரவணபவன் எம்.பி சுட்டிக்காட்டல்

கொழும்பு, பெப். 7

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டச் செய லர்களையும் அவசரமாக மாற்றுவதற்கு இந்த அர சாங்கம் முன்னெடுப்புக் களை நகர்த்தியுள்ளது. இரண்டு மாவட் 06

## புத்தாண்டுக்கு முன் பொதுத்தேர்தல்?

கொழும்பு, பெப். 7

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் அரசியல் களத்தில் பிரகா சமாக தென்படுவதாக அரசியல் ஆய் வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள 23

## தம்பலகாமத்தில் அதிகாலை கோர விபத்து மூவர் மரணம்

### 60 பேர் வைத்தியசாலையில்

திருகோணமலை, பெப். 7

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பகுதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் உயி ரிழந்துள்ளதுடன் 60க்கும் அதிகமானோர் காயமடைந் துள்ளனர். 05

# சாவு 6

## முன்னாள் போராளி சுட்டுப் படுகொலை!

மாங்குளத்தில் சம்பவம் 05



## வவுணதீவில் அடிகாயங்களுடன் தமிழ்ப் பொலிஸின் சடலம் மீட்பு

சந்தேகத்தில் இருவர் கைது 05

## தூக்கிட்டு ஒருவர் சாவு



யாழ்ப்பாணம், பெப். 7

கோப்பாய் தெற்குப் பகுதி யைச் சேர்ந்த நபரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஞானசேகரம் 23



# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழர்களின் நிலங்கள் பறிப்பு!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 7

'ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட அடிப்படையில் அபகரிக்கப்பட்டுவருவதுடன், சிங்கள குடியேற்றங்களும் இடம்பெறுகின்றன. இவை உடன் தடுத்துநிறுத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் மிகப்பெரிய ஆபத்து நேரிடலாம்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அத்துடன், இவையெல்லாம் தெரிந்தும் மௌனம் காத்தபடி அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார் வடக்கைச் சேர்ந்த அமைச்சர் எனவும் விளாசித்தள்ளி னார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின்கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் சில சம்பவங்களானவை தமிழர்களின் மனதை வேதனைக்குட்படுத்தும் செயல்களாகவே அமைந்துள்ளன. குறிப்பாக தமிழர்களின் நிலங்களை அபகரிக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இது அரசாங்கத்தின் வேலைத்திட்டமா அல்லது பிரதேசத்திலுள்ள பிரதிநிதிகளின் வேலைத்திட்டமா என புரியவில்லை.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். இதில் பெரும்பாலானவர்கள் வன்னியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இங்குவந்து வாழ்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படாததால் அங்கு தொடர்ந்தும் முகாம்களிலேயே இருந்துவருகின்றனர்.

எனவே, இவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது பற்றியே அரசாங்கம் சிந்திக்கவேண்டும். ஆனால் இங்கு என்ன நடக்கின்றது? அவர்களின் பூர்வீகக் காணிகள் பறிக்கப்படுகின்றன. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில், வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மூன்றுமுறிப்பு என்ற கிராம அலுவலர் பிரிவிலுள்ள தச்சன் குளம் என்ற கிராமம் தமிழர்களின் பூர்வீகக் கிராமம். போர் காரணமாக அங்கிருந்தவர்கள் இடம்பெயர்ந்து இந்தியா சென்றனர். மேலும் சிலர் வவுனியாவில் ஏனைய பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களின் கிராமத்தில் குறிப்பிட்ட பகுதியை இராணுவம் கைப்பற்றியுள்ளது. ஏனைய பகுதியை ஆறு மாதங்களுக்கு முன்னர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் அபகரிப்பதற்கு முயற்சித்தனர். எனினும், அப்போது அதற்கு இடமளிக்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் தற்போது வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருப்பார், சிங்கள மக்களுக்கு அக்காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறார். இரண்டு மாதங்களில் நடவடிக்கை முடிவுக்கு வரலாம் என கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கை எல்லாம் அறிந்தும் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் அரசியல் வாதிகள் மௌனியாக இருக்கின்றனர். அதேபோல் வடக்கில் சோதனைச்சாவடிகள் இல்லை



என வடக்கிலுள்ள அமைச்சர் ஒருவர் கூறுகிறார். ஜனாதிபதித் தேர்தலின் போது அவருக்கு வாக்குகள் கிடைக்கவில்லை. எனவேதான் பிரதமரிடம் நல்லபெயர் வாங்குவதற்காக இப்படிச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். எனவே, தமிழர்களின் பூர்வீக நிலங்களை திட்டமிட்ட அடிப்படையில் பறிப்பது எதிர்காலத்தில் மிகப்பெரிய ஆபத்தை கொண்டுவரும் என்பதால் அது உடனடியாகக் கைவிடப்படவேண்டும்.

அதேவேளை, தலைவர் பிரபாகரன் இருந்த காலத்தைப்போல் போரிடமுடியாது என அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். ஆயுதமேந்திப் போராட பிரபாகரன் முயற்சிக்கவில்லை. ஆனால், அந்த நேர களச்சூழ்நிலை, உங்களின் (அரசாங்கத்தின்) அலட்சியப்போக்கு, தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட ஒடுக்குமுறை தான் அவரை ஆயுதம் ஏந்த வைத்தது' - என்றார். (ம)

# பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரல்

உடுவில், பெப். 7

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசெயலாளர் பிரிவின் கலாசாரப்பேரவை, இந்த வருடமும் பிரதேச மலராகிய "கலைநிலம்' 5 ஐ வெளியிடவுள்ளது.

கலைநிலம் மலருக்கு பிரதேசத்தின் பாரம்பரியங்கள், வரலாறுகள், பிரதேச ஆளுமைகள் தொடர்பான தகவல்கள், பண்பாடுகள் தொடர்பான ஆக்கங்களையும், பிரதேச எழுத்தாளர்கள் தமது படைப்புக்கள் சார்ந்த ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும்.

உடுவில் பிரதேசத்தை சாராதவர்களும் உடுவில் பிரதேசம் சார்ந்த வரலாற்றுத் தகவல்கள் முதலான ஆக்கங்களை அனுப்பலாம்.

மலருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்" என்ற முகவரிக்கு தங்களது விவரங்களுடன் நேடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 28ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் சிவராஜசிங்கம் ஜெயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# முதலில் குப்பைகளை அகற்றுங்கள் பின்னர் வாகனங்களை அகற்றலாம்

## முன்னணியின் ஜெனன் சீண்டல் முதல்வர் தகுந்த பதிலடி!

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் வீதிகளுக்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகனங்கள் தொடர்பில் திட்டவட்டமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பில் சபையின் நேற்றைய அமர்வில் கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்றபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஜெனன் 'முதலில் குப்பைகளை அகற்றுங்கள். பின்னர் வாகனங்களை அகற்றலாம்' என்று தெரிவித்தார்.

இதைக் கடுமையாகக் கண்டித்தார் முதல்வர் ஆனல்ட்.

ஒரு விடயம் தொடர்பில் ஆரோக்கியமான விவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது சபை நாகரீகம் தெரியாமல் இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடாது. குப்பைகளை அகற்றுவது தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டு இவ்வாறான குதர்க்கக் கதைகளைக் கதைக்கக்கூடாது - என்று முதல்வர் தெரிவித்தார். (ம-105)

# மாநகர எல்லைக்குள் இடையூறாக வாகனங்கள்; கூடுதல் தரிப்பு நேரத்துக்கு வரி எனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் வீதிக்கு இடையூறாக அதிக வாகனங்கள் நிறுத்தப்படு கின்றன. இதனால் குறிப்பிட்ட நேரத்துக்கு அதிகமாக வாகனங்கள் தரித்துநின்றால் அவற்றுக்கு வரி அறவிட வேண்டும் இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே உறுப்பினர் ந.லோகதயாளனால் மேற்படி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. தனது பிரேரணையில் அவர், சபை எல்லைப் பகுதிக்குள் பல திருமண மண்டபங்கள், தனியார் வைத்தியசாலைகள், வாகனத் திருத்தகங்கள் உள்ளிட்ட பல வருமானம் ஈட்டும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் காணி முழுமையாக கட்டடத்தை அமைத்துவிட்டு வாகனத் தரிப்பிடமாக வீதிகளைப் பயன்படுத்துவதால் பயணிகளும் மக்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இதனால் தரிப்பிடத்தில் மட்டுமன்றி வீதியோரம் நிறுத்தும் வாகனங்களுக்கும் மணித்தியால அடிப்படையில் கட்டணம் அறவிட்டே ஆகவேண்டும். இதன் மூலம் வருமானம் ஈட்டுவது மட்டுமல்ல வீதி இடையூறுகளையும் தடுத்து நிறுத்த முடியும். விபத்துக்களையும், நெரிசல் இல்லாத போக்குவரத்தையும் மேற்கொள்வதற்காக மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வரி அறவீட்டினை மேற்கொண்டே ஆகவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த மாநகர முதல்வர், நகரின் மத்தியில் நெருக்கடியான வீதிகளுக்குத் தீர்வாக விரைவில் பொலிஸ் அத்தியட்சகர், மாகாண ஆளுநர் மற்றும் சபையினர் உள்ளிட்டோர் இது தொடர்பில் ஆராயவுள்ளோம். விரைவில் மீண்டும் பரிசீலிக்கலாம் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கிருபாகரன் யாழ். நகரில் அதிக வாகன நெரிசல் ஏற்படுவதற்கு வர்த்தகர்கள் அதிக நெருக்கடியான நேரத்தில் வாகனங்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகளை மேற்கொள்வதே அப்பகுதியில் நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம். இதனால் வர்த்தகர்கள் தமக்கான பொருள்களை இரவு நேரத்தில் இறக்கும் வகையில் ஒழுங்கமைக்க வேண்டும் என்றார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட உறுப்பினர் ந.லோகதயாளன், வர்த்தகர்களுக்கு ஒன்றும் கிழமைக்கு ஒரு தடவையோ அல்லது மாத்துக்கு ஒரு தடவையோ பொருள்கள் வருவது கிடையாது. வர்த்தகர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கோரவில்லை. வேண்டுமானால் நகருக்கு வெளிப்புறமாகவேனும் நடைமுறைப்படுத்துங்கள் என்றார்.

இந்தத் தீர்மானத்தை ஏற்க முடியாது. ஏனெனில் தரிப்பிட வசதியில்லை. அத்தோடு சட்டவிரோதமாக நிறுத்தும் வாகனத்திடம் இருந்து பணம் அறவிட்டால் அவர்களின் செயலை சட்டபூர்வமாக ஏற்பதாக அமைந்துவிடும் என்று உறுப்பினர் மயூரன் தெரிவித்தார்.

இந்த விடயம் இந்த மாநகர சபையில் மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் ஏற்கனவே நடைமுறையில்; உண்டு எனக் கூறி குறித்த தீர்மானத்தை உறுப்பினர் தனேந்திரன் வழிமொழிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ம-105)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.7

ஏ.ஜி. யோகராஜாவின் எழுவோம், நிமிர்வோம், திரள்வோம் எனும் நூல் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

வெளியீட்டுரையை அகிலன் கதிர்காமர் நிகழ்த்துவார். வருகை தரும் அனைவரும் பங்குகொள்ளும் புத்தகத்துடன் பேசுதல் எனும் பிரதான நிகழ்வு நடைபெறும். (க)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

காரைநகர்,பெப்.7

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி. ரவிச்சந்திரன்,சிறப்பு விருந்தினராக காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் ம.திவாகர், கௌரவ விருந்தினராக பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி செ.சோமசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-250)



# அரசின் போக்கு பிழை

## சாடுகின்றார் சம்பிக்க



கொழும்பு, பெப்.7

**பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறும் நோக்கில் அரசு பொருளாதார ரீதியில் தற்போது எடுத்துள்ள தீர்மானங்கள் முற்றிலும் தவறானவையாகும். இந்த நிலைமை தொடர்ந்தால் அரசு அடிப்படைச் செலவுகள் அனைத்தையும் குறைத்துக் கொள்ள நேரிடும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் நோக்கில் பொருளாதார ரீதியில் அரசு எடுத்த தீர்மானங்களால் தற்போது நுகர்வோர், வியாபாரிகள் மற்றும் நடுத்தர மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். சுதந்திரம் பெற்ற பின்னர் வட்டி மற்றும் சம்பளம் செலுத்திய பின்னர் தேசிய வருமானம் இல்லாமல் போன ஒரே அரசாக நடப்பு அரசைக் குறிப்பிட லாம்.

பொருளாதாரம் மற்றும் தேசிய வருமானம் ஆகியவை தொடர்பான சவால்கள் இரண்டு வகைப்படும். நாட்டின் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அவரது 'வியத்மக'வின் (நிபுணர்களின் குழு) பிரதான பேசுபொருளாக உள்ளது.

நல்லாட்சியில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என்று குற்றஞ்சாட்டும் 'வியத்மக' உறுப்பினர்கள் 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தேசிய பொருளாதாரத்தின் நிலைமை எவ்வாறு காணப்பட்டது என்பது தொடர்பில் கருத்துரைப்பதில்லை.

10 வருட கால ஆட்சியில் தேசிய பொருளாதாரம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு பொறுப்புக் கூறவேண்டிய நிலை தோற்றம் பெற்றது.

தேசிய பொருளாதாரம் தொடர்பான கொள்கைகளை பாரம்பரிய அடிப்படையிலே இன்றும் நாம் பின்பற்றுகின்றோம். நல்லாட்சி அரசும், நடப்பு அரசும் பழைய பொருளாதார கொள்கைகளுக்கு அமையவே செயற்பட்டன, செயற்படுகின்றன. புதிய பொருளாதார கொள்கை முறைமை தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கு பல்வேறுபட்ட அரசியல் மற்றும் பொதுக்காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன - என்றார். (எ)

## புல் அறுத்தவரை பதம்பார்த்த பாம்பு

சாவகச்சேரி, பெப். 7

வயல் வரம்பில் புல் அறுத்துக்கொண்டிருந்த குடும்பத் தலைவரைப் பாம்பு பதம் பார்த்தது. அவர் உடனடியாகச் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தாவளை இயற்றாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சியில் நெல் அறுவடைக் காலத்தில் நெற்பயிர்களுக்கிடையில் மறைந்திருக்கும் விஷப் பாம்புகள் அறுவடையில் ஈடுபடுவோர் மற்றும் வரம்புகளில் காணப்படும் புற்கள் வெட்டுவோர் எனப் பலரை வருடாந்தம் பதம்பார்த்து விடுகின்றது.

நெற்செய்கை அறுவடைக் காலத்தில் நெல் அறுவடையின்போதும், புல் அறுக்கும்போதும் கை மற்றும் கால்களுக்கு பாதுகாப்புக் கவசங்களைப் பயன்படுத்துமாறு சாவகச்சேரி மருத்துவமனையினர் அறிவுறுத்தி வருகின்றனர். (த-9)

## 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி.பெப்.7

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் போரால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பத்தில் உள்ள மாணவர்கள் 40 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்குழுவால் இந்த உதவி வழங்கப்பட்டது.

இச்செயற்றிட்டத்துக்கான நிதியை மறைந்த பொன்னுமனுவேற்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் வழங்கிய நிதியில் இருந்தும், விசுவநாத முதலியார் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக வழங்கிய நிதியில் இருந்தும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.(ஐ222)



## தையல் பயிற்சி நிலைய திறப்பு

கொடிகாமம்,பெப். 7

தையல் பயிற்சி நிலைய திறப்பும், தையற் பயிற்சி ஆரம்ப நிகழ்வும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டி வீதி கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழி போராட்டக் குழுவின் மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அறவழி போராட்டக் குழுவின் முன்னாள் தலைவர் வி.சு.துரைராசா கலந்து கொண்டு பயிற்சி நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் கைதடி நுணாவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், இயக்குநர் சபை உறுப்பினர்கள், தையற் பயிற்சி ஆசிரியர், பயிற்சியாளர்கள், கைதடி நுணாவில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி,பெப்.7

கிளிநொச்சி கல்வி வலயத்தின் அறக்கட்டளை நிதியத்தின் கீழ் இயங்கும், ஸ்கந்தபுரம் நந்தகுமார் ஞாபகார்த்த விஞ்ஞானக் கல்வி நிலையத்தினரால், 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



நிகழ்வில் ஸ்கந்தபுரம் இல 1 அ.த.க பாடசாலை, ஸ்கந்தபுரம் இல 2 அ.த.க பாடசாலை, கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், கோட்டைகட்டிய குளம் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்கும் போக்குவரத்து தேவையுடைய மாணவன் இ.கேதுசனுக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டன. கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை ஆசிரியை திருமதிகுமுதினிகனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி, கல்வி நிலையத்துக்கு நிதியுதவி செய்தவரின் பெற்றோர்கள், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் அ.பங்கயற்செல்வன், வவுனியா கட்டங்கள் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் திருமதி நந்தகுமார் நகுலாம்பிகை மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-159)



## கப்பல்

கப்பல் இது கப்பல்
கடல்கடந்து போகுமொரு கப்பல்
கரை விட்டுக் கரைபோகும் கப்பல்

அடக்கிவைத்த யானையினைப் போலே
அலைகடலின் துறைமுகத்தின் ஓரம்
வடக்கயிறும் சங்கிலியும் கொண்டு
வகையாகக் கட்டிவைத்தார் பாரே!

விசைப்பொறியால் சாக்குகளை ஏற்றி
வேற்றூரில் இறக்கி விடும் கப்பல்
அசைந்தசைந்து கடல்மீது மிதந்தே
ஆள்களையும் ஏற்றிக்கொண்டு போகும்!

அலைகடலில் செல்லுகின்ற போதே
ஆடுகின்ற ஊஞ்சலைப் போல் இருக்கும்
தலைமயக்கம் வந்தாலும் கூட
கடற்பயணம் உடல் நலத்தைக் கொடுக்கும்!

## விடுகதை

1. காவி உடையணியாத துறவி, கரையோரம் கடுந்தவம் செய்கிறான். அவன் யார்?
2. காற்று இல்லாத கூண்டில் மஞ்சக் கோழி மயங்கி கிடக்குது. அது என்ன?
3. காலில்லாதவன் வளைவான், நெளிவான், காடு மேடெல்லாம் அலைவான். அவன் யார்?
4. காலைக் கடிக்கும் செருப்பும் இல்லை; காவல் காக்கும் நாயும் இல்லை. அது என்ன?
5. காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும். அது என்ன?
6. காலில்லா பந்தலைக் காணக் காண சந்தோஷம். அது என்ன?
7. வண்ணப் பட்டுச் சேலைக்காரி; நீல வண்ண ரவிக்கைக்காரி. அது என்ன?
8. நான் வெட்டுப்பட்டால், வெட்டியவன் தேம்பி அழுவான். நான் யார்?
9. வித்தில்லாமல் விளையும்; வெட்டாமல் சாயும். அது என்ன?

## விடைகள்

| | | |
|---|---|---|
| 1. கொக்கு | 2. முட்டை | 3. பாம்பு |
| 4. முள் | 5. சேவல் | 6. வானம் |
| 7. மயில் | 8. வெங்காயம் | 9. வாழை |

## யார் அழகு



ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன. ஆனால் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றினர் எனச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடன மாடியபடி சொன்னது குரங்கு.

"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!" என்றது எலி.

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி. "நான் இந்த அழகுப் போட்டிக்கே வர வில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

"என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொன்னது.

"ஆமாம்... ஆமாம்...!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

"நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

"எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் 'அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி. "போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு.

"நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்..." அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன. மறுநாள் அனைத்தும் அழகிய அழகு ராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன. அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப் படுத்தி விட்டான்!" குருவி பலகீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு. குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப் போட்டிக்குச் சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

"முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஓர் ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்டகோணலாகின.

## படத்தில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடிப்போம்...!



## ஆங்கில கால்வாயை கடந்த வீரர்



அட்லாண்டிக் பெருங்கடலில் தெற்கு இங்கிலாந்தையும் வடக்கு பிரான்ஸையும் பிரிக்கும் ஒரு நீரிணை ஆங்கிலக் கால்வாய் ஆகும். வட கடலை அட்லாண்டிக் கடலுடன் இணைக்கும் இந்த கால்வாய், சுமார் 562 கிலோ மீற்றர் நீளமும் 240 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது.

இவ்வளவு பெரிய கால்வாயை எந்த செயற்கை கருவிகளின் உதவியும் இன்றி, கேப்டன் மேத்யூ வெப் என்பவர், நீந்தி கடக்கும் முயற்சியில் இறங்கினார். இதற்காக தீவிர பயிற்சி மேற்கொண்ட அவர், 1875ம் ஆண்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி தனது பயணத்தைத் தொடங்கினார். டோவரில் இருந்து கலாயிஸ் வரையிலான சுமார் 64 கடல் மைல் தூரத்தை 21 மணி 45 நிமிடங்களில் கடந்தார். மறுநாள் அதாவது ஓகஸ்ட் 25ஆம் திகதி தனது வெற்றிப் பயணத்தை முடித்த அவர், ஆங்கில கால்வாயை கடந்த முதல் மனிதர் என்ற சாதனையை பதிவு செய்தார்.

1848ஆம் ஆண்டு ஜனவரி 19ம் திபமி பிறந்த மேத்யூ வெப், 1873இல் 'எமரால்டு' என்ற நீராவிக்கப்பலின் கேப்டனாக பணியாற்றினார். அப்போது ஆங்கில கால்வாயை கடக்கும் ஜே.பி.ஜோன்சனின் முயற்சி தோல்வியடைந்தது பற்றி படித்தார். அதன்பின்னர் தானும் அந்த முயற்சியில் இறங்க வேண்டும் என்று தீவிர பயிற்சி செய்தார். 1875ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி, அவர் கால்வாயை நீந்தி கடக்க முயன்றார். ஆனால், கடுமையாக காற்று வீசியதாலும், அலைகள் கடும் சீற்றத்துடன் இருந்ததாலும் அவர் தனது முயற்சியை கைவிட்டார். பின்னர் ஓகஸ்ட் 24ஆம் திகதி தனது இலக்கை எட்டினார்.

## முனீஸ்வரனுக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் கோட்டை சிறீமுனீஸ்வரன் தேவஸ்தானத்தில் இன்று கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

காலை 6.33 மணி தொடக்கம் 8.05 மணி வரையிலான சுப முகூர்த்த வேணையில் இந்தக் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. அத்துடன் காலை 5 மணியிலிருந்து விநாயக வழிபாடு, யாக பூஜை, ஹோமம் உள்ளிட்ட வழிபாடுகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இரத்தினம் பர்ணாந்து

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பர்ணாந்து நேற்று (06.02.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - தங்கம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பர்ணாந்தின் மனைவியும், புஸ்பராணி (ஜேர்மனி), கருணாகரன், ஜீவராணி, விஜயராணி, செல்வராணி, இந்திராணி, பிரேமராணி, கமலராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2020 ) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
65/7, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
பெனற் இந்திராணி (தயா)

(CS/31081)(11,17) **077 630 7433**

தோற்றம் 26 ... 06 ... 1935



மறைவு 06 ... 02 ... 2020

### பாலப்பு கிருஷ்ணசாமி

இளவாலையைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலப்பு கிருஷ்ணசாமி நேற்று **(06.02.2020)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலப்பு- சிவகாமி தம்பதியினரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், கி.தவமணியின் பாசமிகு கணவரும், சந்திரகுமார் (அதிபர்- யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை), ரஞ்சிதமலர்(அபிவிருத்தி உத்தியோகத்தர் விளையாட்டுத் திணைக்களம்- வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஞானவேல் மற்றும் மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகம்மா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அஷ்மிகா, அதிர்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(07.02.2020)** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயிலிட்டி கொட்டுப்பலம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 077 066 0741 தகவல்:- குடும்பத்தினர்.

### செயற்குழு...

வாகப் பதவிகள் குறித்து இறுதி முடிவை எடுக்க நேற்று உத்தேசிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத சஜித் ஆதரவாளர்கள் நேற்று நடைபெற இருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சில பிரச்சினைகளைப் பேச இருந்தனர். ஆனால், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் இறுதி நேரத்தில் இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் மார்ச் முதல் வாரத்தில் கலைக்கப்படவுள்ள நிலையில் அதற்குத் தயாராக உடனடி நடவடிக்கைகளை எடுக்காமல் இவ்வாறு கட்சித் தலைமை இழுத்தடிப்புச் செய்வது குறித்து சஜித் ஆதரவு அணியினர் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் இவ்வாறே இறுதிநேர முடிவுகளுக்கு ரணில் திட்டமிட்டமிட்டிருந்தார் எனவும் சுட்டிக்காட்டினர். இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் மத்திய செயற்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்படுமாயின் தன்னிச்சையாக சில தீர்மானங்களை சஜித் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி எடுக்கும் என அறியமுடிந்தது. (ம-22)

### பாலியல்...

கழக மட்டத்திலான விசாரணைகள் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகின்றன.

பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்துக்கு தெரிவான மாணவிகள் 4 பேருக்கு, மூத்த மாணவர்களால் ராக்கிங் என்ற பெயரில் பாலியல் துன்புறுத் தல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாணவிகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு எடுத்து தொல்லை கொடுத்ததாகவும், இதன் காரணமாக மாணவி ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்தார் எனவும் கூறப்படுகின்றது.

மாணவிகளுக்கு அழைப்பு எடுத்ததாகச் சொல்லப்படும் மாணவர்களின் அலைபேசி இலக்கங்கள் சமூகவலைத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறு வெளியாகியுள்ள தொலைபேசி இலக்கங்களை அடிப்படையாக வைத்து விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. அதேநேரம் ஆளுநரின் பணிப்பு இணங்க பல்கலைக் கழகத்தின் பீடாதிபதிகள் ஒழுக்காற்றுக் குழுவினர் ஆகியோர் இணைந்து இன்று காலை 10 மணியளவில் தீர்க்கமான விசாரணையொன்றையும் முன்னெடுக்கவுள்ளனர். (ஓ.5.6)

### முன்னாள்...

முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவு மாவட்டம், மாங்குளம் பிரதேசத்துக்குட்பட்ட பாலைப்பாணிப் பகுதியில் முன்னாள் போராளியான குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ரஜி என்றழைக்கப்படும் ஜெயா (வயது -46) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

குறித்த நபர் அந்தப் பகுதியில் சிலருடன் முரண்பட்டிருந்தார் எனவும், எனவே தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். உள்ளூர் தயாரிப்பான இடியன் துப்பாக்கி மூலம் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார் எனவும் மாங்குளம் பொலிஸார் குறிப்பிட்ட னர்.

கொலையானவரின் தலைப் பகுதியில் மட்டும் காயம் காணப்படுகின்றது. அவரின் மனைவி கிளிநொச்சியில் பிரபல கல்லூரி ஒன்றில் பணியாளராகக் கடமையாற்றுகின்றார். கொல்லப்பட்டவர் கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் வசித்து வருபவர். வயல் அருவி வெட்டும் இயந்திரம் வைத்திருப்பவர். அருவி வெட்டும் வேலைக்காகவே பாலைப்பாணியில் தங்கியிருந்தார். சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படாத நிலையில், மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-22)

### வவுணதீவில்...

கொழும்பு, பெப். 7

மட்டக்களப்பு மாவட்டம், வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள ஆயித்தியமலை மூன்றாம் கட்டைப் பகுதியில் அடிகாயங்களுடன் தமிழ்ப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார் இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு, புதூர் 7ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தம்பாப்பிள்ளை சிவராசா (வயது - 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் மாலை வவுணதீவு, மூன்றாம் கட்டைப் பகுதியிலுள்ள தனது பண்ணையைப் பார்வையிடச் சென்றிருந்த நிலையில், நேற்றுக் காலை அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் தனது பண்ணையில் இருந்து வீதிக்கு வந்தபோது அங்கு இருவர் பதுங்குவதைக் கண்டு யார் எனக் கேட்டபோது அவர்கள் தாம் மது அருந்துவதாகத் தெரிவித்துள்ளனர். இதன்போது பொலிஸ் சார்ஜன்ட், 'இல்லை நீங்கள் மாடு களவு எடுக்க வந்துள்ளீர்களா?' எனக் கேட்டபோது அவர்கள் குறித்த சார்ஜனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ் சார்ஜன்ட் மீது இருவரும் அங்கிருந்த பொல்லால் தலையில் தாக்கியதையடுத்து அவர் வீதியில் விழுந்து உயிரிழந்துள்ளார். இதனையடுத்து அவரின் உடலை இழுத்து வீதியின் ஓரத்தில் போட்டுவிட்டு இருவரும் தப்பியோடியுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட அரிசி ஆலை ஒன்றில் வேலை செய்துவரும் ஆயித்தியமலை, தேவாலய வீதியைச் சேர்ந்த முகமட் அஸ்மி, வவுணதீவு, நாவற்குடா ஈச்சந்தீவைச் சேர்ந்த குணசேகரன் சுரேந்திரன் என்பவர்களிடம் பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையில் இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன. பொலிஸ் சார்ஜனின் தாக்குதலில் முகமட் அஸ்மியின் (வயது- 31) உடலில் அடிகாயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்தை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன, மட்டக்களப்பு உதவிப் பொலிஸ்மா அதிபர் லக்சிறி விஜயசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் மெண்டிஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டனர். அத்துடன், விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு அவர்கள் ஆலோசனைகளையும் வழங்கினர்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். இதையடுத்து சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருவருகின்றனர். (ம-22)

### தம்பலகாமத்தில்...

தம்பலகாமம் 99ஆம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து வந்த பயணிகளை இறக்கிக்கொண்டிருந்த இ.போ.ச பேருந்தை தனியார் சொகுசு பேருந்து மோதித் தள்ளியுள்ளது. தனியார் சொகுசு பேருந்தின் சாரதி தூக்கத்தில் பேருந்தைச் செலுத்தி வந்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என விசாரணைகளை மேற்கொண்டுவரும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் தனியார் சொகுசு பஸ்ஸின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்கள் தம்பலகாமம் மற்றும் கந்தளாய் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். தனியார் சொகுசு பேருந்தின் சாரதி உட்பட உயிரிழந்த மூவரின் சடலங்களும் தம்பலகாமம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-22)

# கரவெட்டி பிரதேசத்தில் 278 இடங்களில் டெங்கு

கரவெட்டி, பெப்.7

வடமராட்சியில், கரவெட்டி சுகாதாரப் பரிசோதகர், பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 3 மாதங்களில் 278 இடங்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டுள்ளன. 32 பேருக்கு தண்டம் விதிக்கப்பட்டது.

கரவெட்டி சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நெல்லியடி சுகாதார பிரிவில் 132 இடங்களும், துன்னாலை சுகாதார பிரிவில் 84 இடங்களும், கரணவாய் சுகாதார பிரிவில் 35 இடங்களும், அல்வாய் சுகாதார பிரிவில் 15 இடங்களும், உடுப்பிட்டி சுகாதார பிரிவில் 12 இடங்களுமாக 278 இடங்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் 32 வழக்குகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு இணங்க இடத்தின் உரிமையாளர் ஒவ்வொருவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-422)

கிழவன்காடு கலாமன்றம்
யாழ் கிளை
தைப்பூச நாள்
புதிய கலை மாணவர்களுக்கான அனுமதியும்
நாள் வகுப்பும்
காலம் - 08.02.2020 சனிக்கிழமை
பி.ப 4.00 மணி


428, கே.கே.எஸ் வீதி
(வண்ணைசிவன் கோவில் அருகாமை.யாழ்ப்பாணம்)
பதிவாளர்
077 578 6638

## பதவி வெற்றிடம்

யாழில் புதிதாக 4G தொழில்நுட்பம் மூலம் விசாலமான வலையமைப்பை விஸ்தரித்துள்ள பிரபல தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு பின்வரும் உடனடி பதவி வெற்றிடம் காணப்படுகின்றது.

01. விநியோகஸ்தர் விற்பனைப்பிரதிநிதி
Dealer Sales Res (D.S.R)
02. Sim அட்டை விற்பனைப் பிரதிநிதி
Freelance Employee

078 500 0692, 078 509 9746, 078 500 0580
62/33, Old Post office Road, Jaffna

## தேர்தல்களை...

டச் செயலர்கள் ஏற்கனவே மாற்றப்பட்டு அவர்களுக்குப் பதிலாக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிங்களவர். இவ்வாறிருக்கையில் ஏனையவர்களையும் கூண்டோடு மாற்றும் செயற்பாடானது தேர்தல்களை இலக்கு வைத்த நகர்வென்றே இதனை நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தல் நெருங்கவுள்ள நிலையில் இந்த மாவட்டச் செயலர்களின் மாற்றமானது தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து பொம்மை அரசாங்கமொன்றை நடத்துவதற்கான அரசின் திட்டமிட்ட நடவடிக்கையாகவே கொள்ளவேண்டியுள்ளது. இதன்மூலம், தமக்கான வாக்கு வங்கியைப் பலவந்தமாக உருவாக்கலாம் என்றும், தாம் நினைத்தபடி வடக்கு மாகாணத்தை ஆட்டி வைக்கலாம் எனவும் இந்த அரசு எண்ணுகின்றது.

இந்த அடக்குமுறைகளை தமிழ் மக்கள் கவனித்துக் கொண்டுதான் உள்ளனர். நிச்சயமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர்கள் ஓரணியில் திரளத்தான் போகின்றார்கள். "ஒற்றுமைக்குத் தேவை பொது எதிரி" என்பது இயற்கையின் நியதி. அது எமக்கு விதிவிலக்கல்ல. இந்த அரசின் அடக்குமுறைகளையும் அழுத்தங்களையும் தாங்கித்தாங்கி இனிமேலும் முடியாது என்ற நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். அவர்கள் எதிர்வரும் தேர்தலில் ஓரணியில் திரளும் போது கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட மேலும் சிறப்பானதொரு பாடத்தை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். கூட்டமைப்பின் இமாலய வெற்றி உங்களுக்கு சிம்மசொப்ப னமாக இருக்கும். உங்கள் (ராஜபக்சக்களின்) ஆட்சியில் தமிழர்களின் மீது அளவற்ற அடக்குமுறைகள் தற்போதும் வலிந்து திணிக்கப்படுகின்றன என்பதற்கு சர்வதேசத்துக்குத் தேவைப்படும் சாட்சியாகவும் அது அமையும். கூட்டமைப்பு 22 ஆசனங்களையும் பெறுவதற்காக பாடுபடும் இந்த அரசுக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றிதான் சொல்ல வேண்டும்.

இந்த அரசு ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அடக்குமுறைகள் அதிகரிக்கும் ஒவ்வொரு கணமும் அதை உடைத்தெறியும் ஓர்மம் இயல்பாகவே மனிதர்களுக்குண்டு, அந்த ஓர்மம் தமிழர்களுக்கு இன்னும் அதிகமாகவே உள்ளது. நீங்கள் என்னதான் எம்மீது இப்படியான திணிப்புக்களை மேற்கொண்டாலும், அவை எவ்விதத்திலும் அரசுக்குப் பயனளிக்கப்போவதில்லை என்பதே திண்ணம் - என்றார். (ம)

## வருடாந்த அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் - 2020

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் **2020**ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் **(13.02.2020)** வியாழக்கிழமை பிற்பகல் **1** மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ குழந்தையை பராமரிக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 245 3990

## வேலையாட்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் வேலையாள்கள் தேவை.

தொடர்பு -076 196 6600




- காலம் 08.02.2020 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 6.00மணிக்கு பால்குடப்பவனி மருதனார்மடம் பல்லப்பவைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும்.
- காலை 10.00 மணிக்கு மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி 4.00 மணிக்கு நிறைவடையும். மதியம் அன்னதானம் நடைபெறும்
- இரவு 6.00 மணிக்கு வசந்தமண்டபபூசையும் 7.00மணிக்கு உலகப்பெருமஞ்சம் வீதியுலாவும் பாரம்பரிய கலைகலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதால் அடியவர்களின் வசதி கருதி பாதுகாப்பு ஏற்பாடுகள், வாகனபாதுகாப்பு வசதிகள்,தாகசாந்திநிலையங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விளம்பர அனுசரணையாளர்கள்

குமார் ஜெயகௌரி
குடும்பம்
இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

துரை
சிற்பாலயம்
கோயிலுக்குத் தேவையான
தேர், வாகனங்கள் செய்திட
நாடவேண்டிய இடம்.
தாவடி வடக்கு, கொக்குவில்.

Saranga
Nagai Madam
SARANGA MONEYEXCHANGE
(PVT) LTD
சாரங்கா ஜீவலரி
Tel: 021 222 6972 Fax: 021 222 8869
E-mail: sarankajewellers@yahoo.com
Web: www.sarangajewellers.com
No: 157/1,
Kasthuriyar Road, Jaffna.
WU MONEY TRANSFER

# மரண அறிவித்தல்கள்

மலர்வு 10 ... 09 ... 2000



உதிர்வு 05 ... 02 ... 2020

## ஜெயபாலசுந்தரம் சிவசாஜினி (சிந்து)

மண்கும்பானை பிறப்பிடமாகவும், சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலசுந்தரம் சிவசாஜினி (சிந்து) கடந்த **(05.02.2020)** புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஜெயபாலசுந்தரம் - கஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கீதன், சிந்துஜன், ஜெயகீர்த்தன், கீர்த்தனா மற்றும் மயூசாந் (சுவிஸ்), சீனுசாந் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், வரதராசன் மற்றும் சிவபாதசுந்தரம், பரமலிங்கம், பவானி, பஞ்சாட்சரம் ஆகியோரின் பெறாமகளும், செல்வராணி, சர்வேஸ்வரி, புஸ்பராணி, திலகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகளும் நகேந்திரம் - வள்ளியம்மை, கந்தையா - பாக்கியலட்சுமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(07.02.2020)** வெள்ளிக்கிழமை பிற்பகல் **1.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.44/17, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 077 964 0487, +614 8860 5007**

பிறப்பு 08 ... 12 ... 1984



இறப்பு 05 ... 02 ... 2020

## ஞானசேகரம் சத்தியேஸ்வரன்

(ஜெசோ ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - கல்வியங்காடு)

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசேகரம் சத்தியேஸ்வரன் (ஜெசோ ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - கல்வியங்காடு) கடந்த (05.02.2020) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஞானசேகரம் - மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் ஜெசோதரன், ஜேயன்டிதன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற விஜயரத்தினம், யோகேந்திரம், சிவசம்பு காலஞ்சென்ற கெங்காதரன் ஆகி யோரின் அன்பு மருமகனும் பவளராணி, சின்னத்தங்கச்சி, பேபி ஆகியோரின் பெறாமகனும் சசிரேகா, விஜிகலா, கோகுலதீபன், கோகுலவாசன், தனுசன் ஆகி யோரின் அன்பு மைத்துனனும் கஜந்தினி, மதிரூபன், சிவதர்சன், சிவதாரணி. ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் மகிஷா, லுகேஸ், ஆகாசினி ஆகி யோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2020) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு - 077 618 4401, 077 110 2956, 077 621 4182**

# ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் - துரையப்பா மகள் புஸ்பலீலா**
**முகவரி - வீரபத்திரர் கோவிலடி, மல்லாகம்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 13, கல்லாரை உப்பனளவை ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள மல்லாகம் புத்தபாலன்சீமா என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வி.துரையர் என்னும் பெயரில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தில் நிலப்பரப்பு 2 ¾ இனை முருகர் சரவணமுத்து பிரசித்த நொத்தாரிஸ் A.நாகேந்திரா முகதாவில் 225/01.11.1942 இலக்க அறுதி உறுதியின் மூலம் வயித்திலிங்கம் துரையப்பா வாங்கினார். அதே ஆதனத்தில் வேறு நிலப்பரப்பு 1/2 இனை இராசரத்தினம் கதிர்காமநாதனும் பெண் கமலாவும் ஆகியவர்கள் வயித்திலிங்கம் துரையப்பாவுக்கும் பெண் சிவபாக்கியத்துக்கும் அறுதியாக விற்றார். பின் துரையப்பா கைம்பெண் சிவபாக்கியமும் துரையப்பா கதிர்காமநாதனும் துரையப்பா சிதம்பரநாதனும் துரையப்பா மகள் புஸ்பமலரும் பிரசித்த நொத்தாரிஸ் சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் 2375/16.11.2001 இலக்க நன்கொடை உறுதி மூலம் துரையப்பா மகள் புஸ்பலீலாவிற்கு நன்கொடையளித்தனர். இதில் ஆதன விபரமாக நிலப்பரப்பு 4 ¼ காணப்படுகின்றது. இதில் நிலப்பரப்பு 01 இற்கான தாய் உறுதி தொடர்பாக தகவல்கள் முரண்பட்டுக் காணப்படுவதுடன் காணிப்பதிவகத்தில் அது தொடர்பான ஆவணங்கள் பதிவேடுகளில் காணப்படவில்லை என பதிலளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விவரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையும் புத்தபாலன்சீமா நிலப்பரப்பு 2 ¾ , நிலப்பரப்பு 01, நிலப்பரப்பு ½ இவை அனைத்தும் சேர்ந்து நிலப்பரப்பு 4 ¼ எல்லைகள்.

- **கிழக்கு** - இராசரத்தினம் கதிர்காமநாதனுக்கும் பெண் கமலாவுக்கும் உரிய ஆதனம்
- **வடக்கு** - ஒழுங்கை
- **மேற்கு** - ஒழுங்கையும் தாமோதரம்பிள்ளை கந்தராசாவுக்கும் பெண் மகாலட்சுமிக்கு உரிய ஆதனம்
- **தெற்கு** - ஆறுமுகம் கைம்பெண் இளையாச்சிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள்


மேற்குறித்த ஆதனத்தை துரையப்பா மகள் புஸ்பலீலா எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(CS/31080)(11,17)

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் கந்தசாமி



இணுவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கந்தசாமி நேற்று (06.02.2020) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜயாத்துரை - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் தர்மகுலதேவியின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, திலகவதி மற்றும் உத்திரம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசதுரை (சின்னக்கிளி) ஆகியோரின் மைத்துனனும், துஸ்யந்தினி, ரவீந்திரன் (பிரான்ஸ்), ஹம்சத்வனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முஜீபன் (ஆசிரியர், சஹிரா கல்லூரி, மாவனெல்லை) சிவானந்தி ஆகியோரின் மாமனாரும், கவினேஸ், திசிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2020) வெள்ளிக் கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ் வீதி,**
**4 ஆம் கட்டை, இணுவில்**

**தகவல் : குடும்பத்தினர்**

# WALK – IN – INTERVIEW

## NIHR AF Project - Faculty of Medicine, University of Jaffna

**Post of Research Fellow for Information Technology – 01 Vacancy, Programme Manager - 01 Vacancy, Coordinator for Logistics and Finance -01 Vacancy and Coordinator for Data Collection and Data Quality -01 Vacancy (Full Time, on Contract Basis)**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA established a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute for Health Research (NIHR), UK**

**Required qualifications and experience:**

**1. Research Fellow (Information Technology)**

**Requirements:**

- A bachelor degree in Information Technology/ Computer Science/ Computer Engineering / Software Engineering / relevant field from UGC approved University / HEI or equal qualification.
- At least 1year experience in Information Technology based research field within a multidisciplinary team.

***Remuneration:*** *A monthly salary of LKR 60,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

**2. Programme Manager:**

**Requirements:**

- A bachelor degree in management /commerce/ business administration/ or other equal qualification
- Proven experience in programme management, ability on stakeholder management skills, experience in managing a team, excellent analytical, problem solving and organizational skills, competence in Microsoft applications including MS word, Excel, etc.), and ability to manage multiple tasks and meet demands of a fast-paced environment with changing priorities.

***Remuneration:*** *A monthly salary of LKR 50,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

**3. Coordinator -Logistics & Finance:**

**Requirements:**

- A bachelor degree from UGC approved University / HEI or other equal qualification or other equal qualification
- Proven working experience minimum one year experience in financial and logistics management, deep understanding of financial principles and practice, Proficient in standard logistics software

***Remuneration:*** *A monthly salary of LKR 45,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

**4. Coordinator - Data Collection & Data quality:**

**Requirements:**

- A bachelor degree from UGC approved University / HEI or other equal qualification
- Proven working experience as a data analyst and strong analytical skills with the ability to collect, organize, analyze, and disseminate significant amounts of information with attention to detail and accuracy, Knowledge of statistics and experience using statistical packages for analyzing datasets.

***Remuneration:*** *A monthly salary of LKR 45,000.00 inclusive of CLA and you will be contribute 8% of your salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of your salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.*

**General Conditions:**

- Should be a citizen of Sri Lanka
- Age should be below 35 years on the date of closing application

**Professional competencies required:**

- High level of proficiency in written and spoken English and Tamil
- High level of IT literacy, especially in the areas of Electronic mailing, Word and Excel for office environment, and project management platforms.
- Ability to communicate effectively in Tamil and in English with officials and different stakeholders including local suppliers
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- Ability to achieve the targets in time align plan.

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on **14.02.2020 from 2.30 PM to 3.30PM**, at the **Board Room, Faculty of Medicine, University of Jaffna.** Eligible Candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original educational qualification certificates, Birth certificate, experience certificates and National Identity Card on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website – www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**

# போர் நிலை இல்லையென்று தமிழரை அடிமைப்படுத்தாதீர்

## சு.க.வின் கருத்துக்கு சிவமோகன் எம்.பி. கோரிக்கை

மன்னார், பெப். 7

பிரபாகரனைப் போல் போர் செய்வதற்கு நாட்டில் சூழ்நிலை இல்லை என்பதற்காக தமிழர்களை அடிமைப்படுத்த நினைக்கக் கூடாது என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் வேண்டுகோள் விடுத்தார்.

சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுதந்திரக் கட்சியின் பேச்சாளர், "பிரபாகரனைப் போல் போரில் ஈடுபடக் கூடிய சூழல் தற்சமயம் இல்லை" என்று தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களை இராணுவ அடக்குமுறைக்குள் வைத்திருக்க எண்ணுவது தவறு. கோத்தாபயவின் புதிய அரசு பதவியேற்றபின்னர் கிராமப் புறங்களில் கூட தடைமுகாம்கள் அமைக்கப்பட்டு அடையாள அட்டைப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் கூட வீதிகளில் சுதந்திரமாகப் பயணித்த மக்களை இராணுவத்தினர் சோதனைக்கு உட்படுத்துவது பொருத்தமற்றது.

தனி பௌத்த கொள்கைகளை நிலை நிறுத்தி ஏனைய சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை அடக்கிவிட நினைக்கின்றார்களா? என்ற சந்தேகம் எழுகிறது. சர்வதேசம் நேரடியாகத் தலையிட்டு ஐ.நா.வின் அனுசரணையுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டக் கோரியவாறு பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். - என்றார்.

(கு-213)

**வேலையாள்கள் தேவை**

- கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு ஆண் கூலி வேலையாள் தேவை.
- அரிசி வகைகள் பொதி செய்வதற்குப் பெண் வேலையாள் தேவை.

**சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**

(CS/31078)(11,17)

**077 957 4934**




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **விஜயா சனாதனன்**
அண்மையில் வழங்கப்பட்ட
**இலங்கை அதிபர் சேவை தரம்** III நியமனத்தை
பெற்றமைக்காகவும்
**06.02.2020 BMICH** இல்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**கல்வி முதுமாணிப்** பட்டத்தை
பெற்றமைக்காகவும்
பாராட்டி வாழ்த்துகிறோம்.
Congratulations

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**யா/ சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ்க்கலவன் பாடசாலை**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**



# இன்றைய முன்பள்ளிகள்

பொ.யந்துஜா
இரண்டாம் வருட சிறப்புக் கற்கை
மாணவி
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.



இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் முன்பள்ளி ஒரு குழந்தையின் இரண்டாவது கற்பித்தல் களமாகவே எண்ணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் நான்கு வயதில் பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்பும் முறை காணப்படுகின்றது. இந்த முன்பள்ளியில் பிள்ளைகள் இரண்டு வருடங்கள் கற்றலைத் தொடர்ந்தே தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் ஒருசில நாடுகளில் பிள்ளைகளை மூன்று வயதில் முன்பள்ளிக்கு அனுப்பும் முறையும் காணப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இலங்கை அரசாங்கமானது ஆரம்பபிரிவு மாணவர்கள், இடைநிலைபிரிவு மாணவர்கள், கனிஷ்ட பிரிவு மாணவர்கள் என வகுத்தே கற்றல் திட்டத்தை வடிவமைத்துள்ளது. இதில் கவலைக்குரிய விடயம் யாதெனில் முன்பள்ளி மாணவர்கள் தொடர்பாகவும், அதற்குரிய ஆசிரியர்கள் தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒரு குழந்தையானது தனது தாயின் கருவறையிலேயே தனது முதலாவது கற்றலை ஆரம்பித்து பின்னர், தனது வீட்டுச் சூழலிலும் கற்கத் தொடங்குகிறது. இந்தக் கற்றலைத் தொடர்ந்து பிள்ளைகள் கற்பது முன்பள்ளியில் ஆகும். இங்கு மாணவர்களின் கற்றலுக்கு ஊன்றுகோல்களாக இருப்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே. ஆனால் இவர்களுக்குரிய கலைத்திட்ட விதிமுறைகளும், வரையறுக்கப்பட்ட கல்வித் தகைமைகளும் இல்லாத காரணத்தால் முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடு சிதைவடைய வாய்ப்புத் தோன்றுகின்றது.

இன்றைய சூழலில் பல முன்பள்ளிகளை முன்னணி நிறுவனங்களே நடத்திக் கொண்டிருக்கின்றன. இந் நிறுவனங்கள் தங்களது பொருளாதார நோக்கத்துக்காக, பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைப் புதிது புதிதாக அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எவ்வாறு பிள்ளைகளின் நலன் கருதி பல செயற்றிட்டங்களை நிறுவனங்கள் அறிமுகப்படுத்தினாலும், அரசு எடுக்கும் நடவடிக்கையின் அளவுக்கு அடுத்ததாகவே அவை நோக்கக்கூடியதாகவே இருக்கின்றன.

அந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர்களது கல்வித்தகைமைகளை எடுத்துக் கொண்டால், பொ.த.சாதாரண தரச்சித்திகள், அதைவிட பொ.த உயர் தரத்தில் மூன்று பாடச்சித்திகள் என்பதோடு வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இவ்வடிப்படையில் ஒரு கட்டடமானது நிலையாக இருப்பதற்கு அதன் அத்திபாரம் ஆணித்தரமாக இருக்கவேண்டும். இங்கும் அவ்வாறே. ஒரு பிள்ளையானது சிறந்த கற்றலைத் தொடருவதற்கு pre school எனப்படும் முன்பள்ளி பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் பலமாக இருத்தல் வேண்டும்.

இதற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித்தகைமைகள் பூரணத்தும் உடையதாக இருத்தல் வேண்டும் என்பதே திடம்.

குறைந்தது ஒரு பிள்ளையின் உள்ளத்தையும், அந்தப் பிள்ளையின் குடும்ப சூழலையும் புரிந்துகொள்ளும் அளவுக்காவது ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஆனால் இன்று எமது பிரதேசத்திலும் சரி, அயல் பிரதேசங்களிலும் சரி பிள்ளைகளின் தேவை கருதி கற்பிக்கும் ஆசிரியர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே உள்ளனர்.

சில பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் அங்குள்ள நான்கு தொடக்கம் ஆறு வயதுடைய பிள்ளைகளுக்கு முறையான கற்றலைக் கற்பிப்பதற்கு உகந்த ஆசிரியவளம் இல்லை. இதனால் மேற்கூறிய வயதை உடைய பிள்ளைகளது ஆரம்பக்கற்றலானது கேள்விக்குறியாகின்றது.

இலங்கையில் அனைவருக்கும் கல்வி அதுவும் இலவசக் கல்வி என்று கூறுபவர்களே, முன்பள்ளி மாணவர்களைப் பற்றி சற்று எண்ணிப்பார்க்கின்றீர்களா? நகர்புறப் பிரதேசங்களில் இன்று உரிய முறையில் pre school நடைபெற்று மாணவர்கள் உரிய முறையில் கற்கின்றனர். அதே வேளை கிராமப்புறத்தில் உரிய இடம், முறையான ஆசிரியர்கள், கற்பித்தலை மேற்கொள்வதற்கான சிறந்த வளங்கள் எனப் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கல்வி எந்த வகையில் அனைவருக்கும் சென்றடையும்? அதே சமயம் வெளிநாடுகளில் இந்நிலையானது தலைகீழாக மாறிய நிலையை நாம் காணக்கூடிதாக உள்ளது.

அங்குள்ள முன்பள்ளிகளை அரசும், தனியார் நிறுவனங்களும் மாணவர்களின் கற்றலிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது பங்களிப்பை முழுமூச்சாகச் செய்துவருகின்றன.

இலங்கை அரசும் தங்களது கற்றல் திட்ட வகைக்குள் முன்பள்ளிகளின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் கற்பித்தல் நுட்பங்களையும் இணைத்து நடைமுறைப்படுத்துவது மட்டுமன்றி, சிறந்த ஆசிரியர் குழாம்களையும் தோற்றுவித்தால் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' எனும் வாசகத்தை மெய்யாக்கலாம்.







உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரசன் எவ்வழியோ, அதிகாரிகளும் அவ்வழியே!

சில வாரங்களுக்கு முன்னர் வடக்கில் பணியாற்றி வந்த தமிழ்ப் பொலிஸார் அனைவரையும் , கூண்டோடு இடமாற்றம் செய்யப்போவதாக அறிவிப்புக்கள் வந்திருந் தன. இதனால் பல தமிழ்ப் பொலிஸார் தங்களது இடமாற் றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி, அரச ஆதரவு அரசியல் வாதிகளிடம் ஓடினர். அதன் பின்னர் இடமாற்றம் தொடர் பில் மீளாய்வு கோரி விண்ணப்பித்தவர்களுக்கு இடமாற் றம் நிறுத்தப்பட்டிருந்தது. அப்படிப் பயனடைந்த பொலி ஸார், தங்களின் இடமாற்றத்தை நிறுத்துவதற்கு உதவி செய்த அரசியல்வாதிகளுக்கு இயல்பாகவே வாலாட்டத் தொடங்கி விடுவார்கள். அவர்கள் ஏவியதை எல்லாம் ஏன், எதற்கு என்று கேட்காமல் செய்வார்கள். ' இடமாற்றம்' என்ற அஸ்திரத்தை ஏவுவது போல ஏவி, தமிழ்ப் பொலி ஸார் அனைவரையும் அரசசார்புள்ள அரசியல்வாதிகளின் பொக்கற்றுக்குள் கொண்டு வரும் தந்திரம் கனகச்சிதமாகப் பலித்து விட்டது.

இதே தந்திரத்தை வடக்கில் உள்ள மாவட்டச் செயலர்கள் மீதும், பிரயோகிக்க அரசு விரும்புகிறது போலும். அவர் களுக்கு இடமாற்றம் என்ற பேதியைக் கொடுத்து, தங்கள் காலடிக்குள் அவர்களைக் கோண்டுவரும் திட்டமாகவும் இது இருக்கலாம். அல்லது இப்போதுள்ள மாவட்டச் செயலர்களை இடமாற்றிவிட்டு, தங்களை குறிப்பறிந்து நடக்கக்கூடிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த புதிய மாவட்டச்செயலர்களை நியமிப்பதன் மூலம், தாம் நினை த்ததையெல்லாம், வடக்கில் அரச நிர்வாகத்தினூடாக நடத் தலாம் என்றும் அரசாங்கம் காய் நகர்த்தியிருக்கலாம்.

இதில் இரண்டாவது ஊகத்துக்கே சாத்தியங்கள் அதிகம். இதனை உறுதி செய்வது போல நேற்றொரு அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. திருகோணமலை மாவட்ட அரச அதிபராக முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்கவை நியமிக்க அரசு முடிவெடுத்திருப்பதாக வந்த செய்தியே அது. திருமலை அரச அதிபராக கடமைபுரிந்த புஷ்பகுமார சேவையிலிருந்து ஓய்வுபெற்று சென்றதை யடுத்து மேலதிக அரச அதிபரான அருந்தவராஜா பதில் அரச அதிபராகக் கடமையாற்றிவருகிறார். எனவே நிரந்தர அரச அதிபராக மாவட்டச் செயலராக ருவான் குலதுங்க என்ற முன்னாள் இராணுவ அதிகாரியிடம், திருகோணமலையின் சிவில் நிர்வாக இயந்திரத்தின் சாவி ஒப்படைக்கப்ப டவுள்ளது.

இந்தக் குலதுங்க ஒன்றும், சாதாரண இராணுவ அதிகாரி கிடையாது. யாழ்ப்பாணத்தில் 2012 ஆம் ஆண்டு, 55 ஆவது காலாட்படையின் தளபதியாக இருந்து, பின்னர் தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு பணிப்பாளராக நியமிக்கப் பட்டவர். ஜனாதிபதி கோத்தாபயவின் நம்பிக்கைக்குரிய இராணுவ அதிகாரியான இவர், இனி தமிழர்களின் தலை நகரமான திருகோணமலையை, அரசுக்கு ஏற்ற விதமாக இயங்க வைப்பதில் தன் விசுவாசம் அனைத்தையும் காட் டியே தீருவார். அதற்காக எந்த 'லெவலுக்கும்' போக அவர் தயங்கமாட்டார். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இன்னும் அதிகமாக , சட்டபூர்வமாக அங்கே நடக்கும். விகாரைகள் தோன்றும். கன்னியா வெந்நீருற்று , அங்குள்ள விகாரைக்கே சொந்தமென்று புதிய ஆவணங்கள் , மாவட் டச் செயலரினால் கையளிக்கப்படும். இப்படி நிறைய தர மான, சிறப்பான சம்பவங்கள் நடக்கலாம்.

நாட்டின் ஜனாதிபதியும் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி என்பதால், நாடு முழுதும் சிவில் உடை போர்த்தப்பட்ட ஒரு இராணுவ ஆட்சி நடைபெறுவதையே விரும்புகிறார். வெளிப்பார்வைக்கு நாடுமுழுதும் சிவில் நிர்வாகம் நடை பெறுவது போலத் தோன்றினாலும், உண்மையில் இரா ணுவ ஆட்சியே இனி நடக்கப்போகிறது. அதற்கான வெள்ளோட்டம் திருகோணமலையில் தொடங்கியிருக்கி றது. அதன் இன்னொரு விரிவாக்கம், வடக்கில் மாவட்ட செயலாளர்களின் இடமாற்றத்தின் பின்னர், புதியவர்களை நியமிக்கும் போது நிகழலாம் . இங்கும் சிங்கள மேலாதிக் கத்தின் கரங்கள் பலம் பெறலாம். தமிழர்களின் மரபார்ந்த கலாசார, பண்பாட்டு இருப்புகளுக்கு பௌத்த வர்ணம் பூசப்படலாம். என்ன நடந்தாலும் ஏன் என்று எவரும் கேட்க முடியாது. அப்படியான ஒரு இறுக்கமான நிர்வாக வலையமைப்பை கோத்தாபயவின் அரசாங்கம் அதிகாரி களூடாகக் கொண்டுவரக்கூடும். அரசன் எவ்வழியோ, அதிகாரிகளும் அவ்வழியே!

### சாவகச்சேரி நகர சபை ஆளுகையில்

# ரூ.ஒன்றரைக் கோடியில் 10 வேலைத் திட்டங்கள்

சாவகச்சேரி, பெப். 7

சாவகச்சேரி நகரசபை சமர்ப்பித்த, முன்னுரிமை அடிப்ப டையில் முன்மொழியப்பட்ட ஒன்றரைக்கோடி ரூபா பெறுமதியான 10 வேலைத்திட்டங்கள் மாவட்டச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பங்களிப்புடனான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவான கிராமம் திட்டத்தில் இந்தத் திட்டம் அனுமதிக்காகச் சமர்ப் பிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கோயிற்குடியிருப்பு கிராமத்தில் 20 லட்சத்தில் கடற்கரை வீதியில் வடிகால் அமைத் தல், சங்கத்தானை வட்டாரத்தில் 20 லட்சத்தில் சித்திரவேலாயுதர் வீதி சீரமைத்தல், மண்டுவில் வட்டாரத்தில் தலா 5 லட்சம் ரூபா செலவில் மடத்தடி இடது பக்க முதலாம் ஒழுங்கையும், வீரபத்திரர் வீதியும் சீரமைத்தல், 10 லட்சம் ரூபா செலவில் மண்டுவில் பச்சு இணைப்பு வீதி சீர மைத்தல், கல்வயல் வட்டாரத்தில் 20 லட்சம் ரூபா செலவில் சித்தன்மாவடி மானாவளை இணைப்பு வீதி சீரமைத்தல், நுணாவில் கிழக்கு வட்டாரத்தில் 10 லட்சம் ரூபா செலவில் தபாற் கந்தோர் முதலாம் ஒழுங்கை சீரமைத்தல், நுணாவில் மேற்கு வட்டாரத்தில் 20 லட்சம் ரூபா செலவில் கைதடி நுணாவில் எல்லை வீதி சீரமைத்தல், மீசாலை கிழக்கு வட்டாரத்தில் 20 லட்சம் ரூபா செலவில் தாளையொடுதுரவு ஒழுங்கை சீரமைத்தல், மீசாலை மேற்கு வட்டா ரத்தில் 20 லட்சம் ரூபா செலவில் ஈச்சம்தாழ்வு ஒழுங்கை சீரமைத்தல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (த-9)

## இழுத்து மூடப்பட்ட உணவு நிலையம்

சாவகச்சேரி, பெப். 7

சுகாதாரமற்ற முறையில் உண வுப் பொருள்களை வைத்திருந்த உணவகத்தை மூடுமாறு சாவகச் சேரி நீதிமன்று நேற்று உத்தர விட்டது.

ஏ9 முதன்மை வீதியில் தரமான மற்றும் சுத்தமான உணவு வகை கள் பாவனையாளர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நல் நோக்குடன் சாவகச்சேரி சுகா தார மருத்துவ அதிகாரியின் பணிப்பின் பேரில் யாழ்ப்பாண மாவட்ட உணவுகள், மருந்துகள் பரிசோதகர் மற்றும் மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரின் தலை மையில் நேற்றுமுன்தினம் சாவ கச்சேரி நகர் மற்றும் கைதடிப் பகுதிகளில் 14உணவு கையா ளும் நிலையங்களில் திடீர் பரி சோதனை நடத்தப்பட்டது.

சுகாதாரமற்ற நிலையில் காணப் பட்ட உணவக உரிமையாளர் மீதும் பொரித்த அப்பளம் மற் றும் 'ரோல்' ஆகியவற்றை அச் சிட்ட தாள்களில் வைத்திருந்த உணவக உரிமையாளர் மீதும் சாவகச்சேரி நகர பொதுச் சுகாதா ரப் பரிசோதகரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சுகாதாரமற்ற நிலையில் உணவ கத்தை வைத்திருந்த வழக்கில், இரண்டு மாதங்களுக்கு முன்னர் உணவகத்தில் காணப்பட்ட குறை பாடுகளைத் திருத்தம் செய்யு மாறு அறிவித்தல் அனுப்பியும் திருத்தம் செய்யப்படவில்லை யென்று பொதுச் சுகாதாரப் பரி சோதகர் நீதிமன்றில் தெரிவித் தார்.

இதனையடுத்து உணவகத்தை உடனடியாக மூடுமாறு உத்தர விட்டு பொதுச் சுகாதார பரிசோத கரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய திருத்தம் மேற்கொண்ட பின்னர் உணவகத்தைத் திறக்க உத்தரவிட்டு, 17 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது மன்று.

பொரித்த உணவுப் பொருள் களை அச்சிட்ட தாள்களில் வைத் திருந்த குற்றத்தை மற்றைய உணவக உரிமையாளர் ஏற் றுக்கொண்டார். அவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டது. (த-9)

## முதியவர்கள் ஆன்மிக சுற்றுலா

யாழ்ப்பாணம்,பெப்.7

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் சிரேஷ்ட பிரஜைகள் ஆன்மிக சுற்றுலாப் பயணத்தை அண் மையில் மேற்கொண் டனர்.

திருக்கேதீஸ்வரம், மடு, மன்னார், தலை மன்னார் ஆகிய இடங் களுக்குச் சென்றனர். பயண ஒழுங்கை கிளி நொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத் தியோகத்தர் மேற் கொண்டார். அதற் கான நிதி அன்ப ளிப்பை கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன் னடத்தைப் பிரிவு உத் தியோகத்தர் எஸ்.பத்ம குமார் வழங்கினார். (க)





# மாந்தையில் வயல் விழா

மன்னார், பெப். 7

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாப்பாங்கண்டல் கிராமத்தில் நெல் அறுவடை விழா(வயல் விழா) நேற்று நடைபெற்றது.

மன்னார் விவசாயத் திணைக்கள ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவ குமார் கலந்து கொண்டார்.

இதன்போது 'சுகந்தல்' எனும் நெல் அறுவடை செய்யப்பட்டது. விழாவில் விவசாயத் திணைக் கள அதிகாரிகள், பயிலுநர்கள், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-56)



# ஆடிப்போன வடக்கின் பொருளாதாரம்

எஸ்.அன்ரன் அருள்வண்ணன்

> யாழ்ப்பாணத்தில் நல்ல நீர் எங்கும் கிடைக்கும் பிரதேசமாக கருதப்பட்டது. ஆனால் இன்று எத்தனை குடும்பங்கள் போத்தல் நீர் அருந்தி வாழத் தொடங்கி விட்டனர் ? இந்த நிலத்துக்கு என்ன செய்தோம் ? இந்தச் சூழலுக்கு என்ன செய்தோம். சூழல் மாசடைதல் வெறுமனே உடல் ஆரோக்கியத்தை மட்டும் பாதிக்கவில்லை. உள ஆரோக்கியத்தையும் வெகுவாக பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

பொருளாதாரம் நிலை தடுமாறும் இடத்து பல இழப்புக்களை, பல விடயங்களை, வீண் விரயங்களைச் சந்திக்க வேண்டி வரும். வடக்கின் பொருளாதாரம் பல்வேறு வழிகளில். பலவீனப்படுத்தப்பட்டுக் கொண்டே போகிறது. பொருளாதாரத்தை மேம்படுத்த இறக்குமதி செய்யப்படுபவை எவை?, வடக்குக்கு வெளியிலிருந்து பெறப்படும் சேவைகள் எவை? என்பவற்றை அறிந்து வடக்குக்கு வெளியில் உள்ள இடங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தொழில், சிறு கைத்தொழில்கள், வெளிநாட்டுக்கான ஒன்லைன் கல்விச்சேவை அல்லது துறைசார் சேவைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தொழில், சிறு கைத்தொழில்கள் போன்ற தொழில்களில் ஈடுபடுதல் நாகரிகம் அற்றது, கௌரவக் குறைச்சல், அல்லது பின்னடைவாகக் கருதப்படும் மனப்பாங்கு நீங்க வேண்டும். இந்தத் தொழில்களில் ஈடுபடுவோருக்கு பொருத்தமான முறைகளைக் கற்பிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். விவசாயத்தில் கடுமையான பூச்சிகொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றமை, மீன் வளத்தை அழிக்கும் தொழில் முறைமை போன்ற காரணங்களால் தொழில் வளர்ச்சியில் பின்னடைவுகள் ஏற்படுகின்றன.



வடக்கை சார்ந்த மருத்துவர் ஒருவர் ஆரோக்கியமாக வாழ்வது பற்றி எதுவும் பேசாது அல்லது நோய்கள் பற்றி ஆரோக்கிய வாழ்வு பற்றி விழிப்புணர்வு எதுவுமே ஏற்படுத்தாமல், வடக்கு மக்களுக்கு நோய்க்கான சிகிச்சை அளிப்பதன் மூலம், வடக்கின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது.

வடக்கை சார்ந்த ஆசிரியர் மாணவர்களுக்கு கல்வி கற்பித்து உழைப்பாராகின் வடக்கின் பொருளாதாரம் உடனடியாக அல்லது நேரடியாக உயர்ந்துள்ளது என்று பொருள் இல்லை. அதே ஆசிரியர் தெற்கு மாணவர்களுக்குக் கற்பித்து அல்லது வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கு ஒன்லைன் மூலம் கற்பித்து அந்த பணத்தை வடக்குக்குச் சேர்ப்பார் ஆயின் அது பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

பல வருடங்களுக்கு முன்னர் தொழிற்சாலைகள் நிறைந்த இடத்தில் இன்று அதிகமாக காணப்படுவது லீசிங் கம்பனி, வங்கிகள். மூலைக்கு மூலை பெரும் கட்டடங்கள் எழுப்பப்பட்டு பொருளாதாரம் உறிஞ்சப்படுகிறது. இது ஆரோக்கியமற்ற நிலையையே காட்டுகின்றது.

### சூழல் மாசடைதல்

யாழ்ப்பாணத்தில் நல்ல நீர் எங்கும் கிடைக்கும் பிரதேசமாக கருதப்பட்டது. ஆனால் இன்று எத்தனை குடும்பங்கள் போத்தல் நீர் அருந்தி வாழத் தொடங்கி விட்டனர் ? அப்படியிருக்க இதே இடத்தில் நீரை அருந்திய எமது பிரதேசவாசிகள் ஆகிய முன்னோர் 100 வயதை தாண்டி இதே இடத்திலேயே ஆரோக்கியமாக வாழ்ந்தார்களே ? அப்படியாயின் நாங்கள் இந்த நிலத்துக்கு என்ன செய்தோம் ? இந்தச் சூழலுக்கு என்ன செய்தோம். சூழல் மாசடைதல் வெறுமனே உடல் ஆரோக்கியத்தை மட்டும் பாதிக்கவில்லை. உள ஆரோக்கியத்தையும் வெகுவாக பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. வெறுமனே சூழல் மாசடைய விடப்படுதல் என்பது நமது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் எனில் எமது மருத்துவ செலவு அதிகரிக்கும். எமது உழைப்பு நேரம் குறையும். நமது வினைத்திறன் குறையும். ஆனால் உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்லாமல், இது உள ஆரோக்கியத்திலும் கை வைக்கிறது. ஆற்றுப்படுத்தல் குறைந்துபோய் புதிய உளவியல் வியாதிகளுக்குக் கூட இட்டுச் செல்லலாம்.

கடலில் மலக்கழிவு கொட்டப்படுகிறது. அவற்றை மீன்கள் உண்கின்றன.



இந்த மீனை வெட்டி சமைக்க எத்தனை பேர் முன்வருவார்கள் ? உடலுக்கு ஆரோக்கியமான மீன் உணவை வெறுக்கும் நிலையில் பலர் உள்ளனர். மீனில் ஏற்பட்ட வெறுப்பு வெளி மாவட்டங்களில் இருந்து இறக்கப்பட்ட கருவாட்டு வகைகள், பதப்படுத்தப்பட்ட சுவையூட்டப்பட்ட கருவாடு, மீன் ரின் அல்லது வெளிநாடுகளில் இருந்து வெளி மாவட்டங்களில் இருந்து பதப்படுத்தப்பட்ட இறைச்சிக்கு மாறும் நிலைமை ஏற்படுத்தும். இதனால் வடக்கின் பொருளாதாரம் இடம்பெயரும்.

### திருடர்கள் பயம்

வடக்கை சார்ந்த மக்களின் பெறுமதி வாய்ந்த பொருள்கள், நகைகள் வங்கிகளில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்பு சேவைக்கு ஆரம்பத் தொகையாக ஒரு பெருந்தொகையை வங்கி அறவிடுவதோடு, வருடத்துக்கு வருடம் இன்னும் ஒரு தொகையை அறவிடுகிறது. இதைத் தவிர பணத்தை வீட்டில் வைக்கப் பயத்தின் காரணமாக வங்கியில் கொண்டு போய் வைப்பிலிடுகின்றனர். இதே பணம் அதிக வட்டிக்கு வடக்கை சார்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு அதனால் ஈட்டப்படும் லாபம் தெற்கு நகர்கிறது. வடக்கு மக்கள் பணம், திருடர்களால் நகர்த்தப்படுகிறது.

### லீசிங் கம்பனிகள், தனியார் வங்கிகள்

வடக்குக்குப் பணத்தைக் கொண்டு வரும் தொழில்களை விடுத்து, தெற்குக் கம்பனிகளின் வியாபார முகவர்களாக அல்லது தனியார் லீசிங் கம்பனிகளில், வங்கிகளில் வேலைக்குச் சேர்ந்து கொள்வதை மிகக் கௌரவம் என நினைக்கும் மனப்பாங்கு ஏற்பட்டுள்ளது. இது ஆபத்தான மாயை என்றே கூறலாம். அரச வங்கிகளில் கடனை எடுப்போம் ஆயின் இதில் ஈட்டப்படும் லாபத்தின் ஒரு பகுதி மீண்டும் வடக்கு மக்களுக்குப் பயன்படும் சாத்தியம் உள்ளது.

### மக்கள் செறிவு பரம்பலுக்கு ஏற்ப நிறுவனங்களை அமைக்க அனுமதி

முன்னேறிய நாடுகளில் ஒரு பிரதேசத்தில் உள்ள மக்கள் செறிவுக்கு ஏற்ப தேவை உறுதி செய்யப்படும் இடத்து புதிய வியாபார நிலையங்கள் அமைக்க அனுமதி கொடுக்கப்படுகிறது . ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் ரொட்டிக் கடை வைத்து நன்றாக உழைத்தால் அடுத்தவர் அதற்குப் பக்கத்திலேயே ரொட்டிக் கடை போடுவார்.

ஒருவர் கல்யாண மண்டபம் கட்டினால், அடுத்தவர் பக்கத்திலேயே கல்யாண மண்டபம் கட்டுவார். இதனால் நிலப்பகுதி பெரிய முதல் என்பன முடக்கப்படுகின்றன. இந்த முதலை கைத்தொழிலுக்கு முதலீடு செய்யப்படும் பட்சத்தில் இதன் மூலம் தெற்கிற்கு பணம் போகும் வழியை நிறுத்தலாம் அல்லது குறைக்கலாம். எனவே அரசாங்கம் செறிவு அவசியம் கருதி வியாபார அனுமதி கொடுக்கும் முறையை வடக்கில் கொண்டு வரவேண்டும். மாறாக இவர்கள் பழையான வியாபார நடவடிக்கைகளுக்கு கடன் கொடுக்க நிறுவனங்கள் போட்டி போடும் நிலையில், வடக்கின் பொருளாதாரம் சூனியத்தை நோக்கி நகர்கிறது என்பதில் ஐயமில்லை.

# முடிவின்றி நீள்கிறது யானைகளின் போர்!

## *செயற்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு*

கொழும்பு, பெப்.7

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நேற்று செயற்குழு கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அது பிற்போடப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாச தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணிக்கான பொதுச் செயலாளரை நியமிப்பது, புதிய கூட்டணியின் சின்னம், பெயர் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். கூட்டணியின் பெயர், சின்னம் ஆகியன தொடர்பில் அனைத்துத் தரப்புகளின் கருத்துகளை உள்வாங்கிய பின்னரே செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுவதே சிறப்பு என்பதாலேயே கூட்டம் பிற்போடப்பட்டது எனவும் அவர் கூறினார்.

புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தனர்.

அதன்படி ரஞ்சித் மத்தும பண்டாரவைப் பொதுச்செயலாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பெயரிட்டார். இந்த முடிவுக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது.

பொதுச்செயலாளரைப் பெயரிடுவதற்கான அதிகாரம் சஜித்துக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அவரின் முடிவுக்கு கட்சியின் மத்திய குழுவின் அனுமதி அவசியமாகும். இந்த விவகாரம் பற்றி மேலும் ஆராயும் நோக்கில் ரணில் தரப்பால் செயற்குழு கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (எ-44)



## நிறுவுநர் தின நிகழ்வு


காரைநகர்.பெப்.7

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் நிறுவுநர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பிரதேச செயலருமான சா.சுதர்சன் கலந்துகொண்டு நினைவுப் பேருரையாற்றினார்.

மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் காரைநகர் பிரதேச சபையின் உப தவிசாளர் பாலச்சந்திரன், மற்றும் நிறுவுநர்களின் வழித்தோன்றல்களில் ஒருவரான திருமதி.முருகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாகாணமட்ட குழுநிலை சங்கீதப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ)



*மட்டுவில் லூர்த்து அன்னை ஆலய வருடாந்த திருவிழாவின் நற்கருணைப் பவனி கடந்த திங்கட்கிழமையும், மறுநாள் லூர்த்து அன்னையின் சுற்றுப்பிரகாரமும் சிறப்பாக நடைபெற்றன. (ஐ-159)*

## பெப்ரவரி 14ஆம் திகதி வாக்காளர் பட்டியல்




யாழ்ப்பாணம், பெப். 7

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 14ஆம் திகதி வெளியிடப்படும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகின. ஒவ்வொரு மாவட்டச் செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இடம்பெயர்ந்த உள்ளக வாக்காளர்களைப் பதிவு செய்வது தொடர்பான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகள் முடிவடைந்ததும், எதிர்வரும் 14ஆம் திகதி வாக்காளர் பெயர்ப் பட்டியல் இறுதி செய்யப்பட்டு வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## வர்த்தகர்களுக்கு செயலமர்வு

வவுனியா, பெப். 7

வவுனியா மாவட்ட மருந்தக உரிமையாளர்களுக்கான செயலமர்வு வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு வீதியில் அமைந்துள்ள வர்த்தக சங்கக் காரியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

வவுனியாவில் பாடசாலை மாணவர்களிடம் போதையேற்றும் மருந்துகளின் பாவனை அதிகரித்துவரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தி நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இது நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக சங்கச் செயலாளர் ஆறுமுகம் அம்பிகைபாலன் தலைமையில் இடம்பெற்ற செயலமர்வில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர். மானவடு, சுகாதார மருத்துவ அதிகாரி யூட் பீரிஸ், உணவு மருந்து சுகாதார பரிசோதகர் பார்த்தீபன் ஆகியோர் திணைக்களம் சார்பில் பங்குபற்றியிருந்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் சிபாரிசு இன்றி மருந்துகளை வழங்க வேண்டாம். அவ்வாறு வழங்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு மருந்துகளை வழங்கும் சமயத்தில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட வேண்டும், அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தர்களிடம் மருந்துகளைக் கொள்ளவனவு செய்தல் வேண்டும் . கட்டாயம் அனைத்து மருந்தகங்களிலும் குளிரூட்டி பயன்படுத்தப்பட வேண்டும் . மருந்துகள் சீராகப் பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டன.

இவற்றை மீறும் மருந்தக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரி விக்கப்பட்டது. (து-18,110)



## காலணி தயாரிப்பாளரை ஊக்குவிக்க சலுகைகள்!

கொழும்பு, பெப்.7

காலணித் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல சலுகைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் காலணி மற்றும் தோல்சார் உற்பத்தியாளர்கள் 3 இலட்சம் பேர் உள்ளனர். காலணி உற்பத்திசார் 10 பெரிய நிறுவனங்களும் 30 நடுத்தர நிறுவனங்களும் 3 ஆயிரம் சிறு அளவிலான உற்பத்தி நிறுவனங்களும் காணப்படுகின்றன என்று கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# மருதங்கேணி பணியாளர்களுக்கு கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு

## அமைச்சுக்குத் தீர்மானம் அனுப்பியது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு

**யாழ்ப்பாணம், பெப். 7**

**வெளியிடங்களிலிருந்து மருதங்கேணி பிரதேசத்துக்கு கடமையாற்ற வருபவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குமாறு கோரும் தீர்மானம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டு, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மருதங்கேணிப்பிரதேசத்துக்கு கடமையாற்ற வரும் வெளிப் பிரதேசப்பணியாளர்களுக்குக்கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கான உதவு தொகையாக 5 ஆயிரம் ரூபாவும், அந்தப் பிரதேச பணியாளர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட வேண்டும். கிராம மட்டத்தில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு பிரயாணப் படியாக 2 ஆயிரத்து 500 ரூபாவும், விடுமுறைக் கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மருதங்கேணிப் பிரதேச செயலகத்தால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

'நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

எமது பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றுபவர்களும் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு தேவை. தற்போது விலைவாசியும் அதிகரித்துள்ளமையால் 5 ஆயிரம் கோரியுள்ளோம். உள்ளக வீதிகள் சரியாக இல்லாமையால், அந்தப் பிரதேசத்திலிருந்து வரும் பணியாளர்களும் 2 ஆயிரத்து 500 ரூபா தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

மருதங்கேணிப் பிரதேசத்தில் வந்து கடமையாற்றுவதற்கு பணியாளர்கள் பின்னடிக்கின்றார்கள். அவர்களுக்கு உதவுத் தொகையாக இதனை வழங்கினால் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உதவியாக இருக்கும்' என்று மருதங்கேணிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

'2016ஆம் ஆண்டு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் குழுவினர் இங்கு வந்தனர். அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு, நெடுந்தீவுக்கு மாத்திரமே கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங்க முடியும் என்று பரிந்துரைத்தார்கள். அதுவும் 2 ஆயிரம் ரூபாவையே அவர்கள் பரிந்துரைத்தார்கள். கடந்த ஆண்டு 5 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளோம்.

நெடுந்தீவை வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு அதனை வழங்கக் கூடாது என்றுதான் அவர்கள் பரிந்துரைத்திருந்தார்கள். நாங்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் போது நியாயமாக முன்வைக்கவேண்டும்' என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

'நெடுந்தீவில் பணியாற்றும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கினாலும் நன்று அரச பணியாளர்கள் அங்கு இல்லாததால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கினால் அரச பணியாளர்கள் அங்கு சென்று சந்தோசமாகக் கடமையாற்றுவார்கள். அதேநேரம் மருதங்கேணி பிரதேசத்துக்கு வெளியிடங்களிலிருந்து சென்று கடமையாற்றும் பணியாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குவதைக் கோரும் தீர்மானத்தை நாங்கள் எடுத்து அமைச்சுக்கு அனுப்புவோம்' என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ஒ.5)

### கலந்துரையாடல்

கிளிநொச்சி.பெப். 7

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் முழுநிலா கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி பயிற்சி மண்டபத்தில் முற்பகல் 10 .மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் "இந்திய அரசால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் புலமைப் பரிசில் திட்டங்களும், கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும்" எனும் தலைப்பில் இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் கல்விப் பிரிவு ஆலோசகர் கோ.நாராயணன் சிறப்புரையாற்றவுள்ளார். (ஜ-159)

## பெற்றோல் விற்பனையை உள்ளடக்கிய

# எரிபொருள் நிரப்பு நிலையம் மருதங்கேணிக்குத் தேவை

யாழ்ப்பாணம், பெப். 7

மருதங்கேணிப் பிரதேசத்தில் பெற்றோல் விற்பனையையும் உள்ளடக்கியதாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மருதங்கேணி பிரதேச செயலகத்தால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



மருதங்கேணிப் பிரதேசத்தில் எரிபொருள் விற்பனைநிலையம் உள்ளது. அங்கு மண்ணெண்ணெய் மாத்திரம் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. பெற்றோல் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வடமராட்சி கிழக்கு மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. எனவே பெற்றோல் விற்பனை நிலையத்தையும் உள்ளடக்கியதாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இது தொடர்பான கோரிக்கை முன்னைய பிரதேச செயலரால் அனுப்பி வைக்கப்பட்டது என்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், அனுமதி வழங்குவதற்கு விண்ணப்பிப்பவர்களின் பெயரில் காணி உரித்து இருக்கவேண்டும் என்று தெரிவித்தனர். அப்படியானால் மண்ணெண்ணெய் விற்பனைக்கு எவ்வாறு அனுமதி வழங்கினீர்கள் என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், நிலுவை அனுமதியே வழங்கப்பட்டதாகக் கூறினார்கள். அப்படி இப்போது வழங்க முடியாதா என்று ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கேட்டதற்கு, திணைக்களம் அப்படிப்பட்ட அனுமதியைப் பெற்றோலுக்கு வழங்காது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் பதிலளித்தனர்.

நிலுவை அனுமதியுடன் கோரிக்கைக் கடிதத்தைத் தருமாறும் இது தொடர்பில் அமைச்சருடன் நேரடியாகப் பேசுவதாகவும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இ.அங்கஜன் தெரிவித்தார். (ஒ.5)

### தேர்த்திருவிழா

காரைநகர்.பெப்.7

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. திருவிழா கடந்த 31 ஆம் திகதி ஆரம்பமானது. (ஜ-250)

### மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்.பெப்.7

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை முதல்வர் சு.மோகனராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

### பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி.பெப்.7

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவன் சி.ரவிக்குமார், கௌரவ விருந்தினராக பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சி.சின்னராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ- 9)

# உதிரிகள் களமிறக்கப்பட்டாலும் மக்கள் ஆதரவு கூட்டமைப்புக்கே!

## வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

தேர்தல்களில் பல அணிகள் உதிரிகளாகப் போட்டியிட்டாலும் அவற்றையெல்லாம் நிராகரித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையே தமிழ் மக்கள் பலப்படுத்துவார்கள் என்ற திடமான நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்த தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வீ.கே. சிவஞானம், "மக்கள் உதிரிகளுக்கு வாக்களித்து வரலாற்றுத் தவறு இழைக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.



தேர்தல் நிலைமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த தேர்தல் சவால் மிக்கதாகவே இருக்கும். ஏனெனில், எங்களோடு இருந்த எல்லோரும் பிரிந்துநின்று, கூறுகூறாகத் தேர்தல்களில் பங்குபற்றுகின்றனர். ஒரு கூட்டமைப்பு அல்லது கூட்டு ஏற்படுத்தப்படும் அல்லது ஏற்படுத்த முயற்சி நடக்கின்றது.

ஆகவே தேர்தல் சவாலாக இருக்கும் என்பது உண்மை. ஆனால், இறுதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே மக்கள் தெரிவு செய்வார்கள். ஒட்டு மொத்தமாக கூட்டமைப்பைத் தெரிவு செய்ய வேண்டிய தேவையும் இருக்கிறது. ஏனென்றால் சில்லறையாக உதிரிகளாக நாடாளுமன்றுக்குச் சென்று சாதிக்க முடியாது. பலமாகவே நிற்க வேண்டும்.

### வியாழேந்திரன்களை உருவாக்காதீர்கள்!

நான் ஏற்கனவே சொன்னது போல ஒரு தலைமையின் கீழ் நிற்க வேண்டும். அந்தத் தலைமைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும். சுயநலம் கொண்டவர்கள் ஓர் இடத்துக்குப் போனால் இன்னும் சில வியாழேந்திரன்கள்தான் உருவாகுவார்கள்.

ஆகவே அதைத் தவிர்ப்பது என்றால் கூட்டமைப்பை முழுமையான ஒரு தலைமைத்துவம் கொண்ட அமைப்பாக கட்சியாக மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். பலகால வரலாற்றில் அதுவே நடந்திருக்கிறது. அதையே மக்கள் செய்வார்கள் என்று நம்புகின்றேன். ஆகவே தேர்தல் நாள் வரைக்கும் பெரிய சவாலாக இருக்கின்ற விடயம். தேர்தலன்று மாறி மக்கள் கூட்டமைப்பை நிச்சயமாக ஆதரிப்பார்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

ஈபிடிபியைத் தவிர ஏனைய அனைவரும் எங்களிடம் இருந்து போனவர்கள் தான். ஆனபடியால் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகளை அவர்கள் பிரிந்திருந்தால் உடைத்துக் கொள்வார்கள் என்பது உண்மை. ஆனால் அது எந்த வகையிலும் ஒரு தாக்கத்தை எங்களுக்கு எற்படுத்தக் கூடிய கூட்டணியாக அல்லது எதிரணியாக அமையாது.

குறிப்பாக 2004 தேர்தலில் எத்தனை இலட்சமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்கள் எல்லாம் அதன் பின் வெளியேறி என்னத்தைப் பெற்றார்கள்? மக்கள் என்ன தீர்ப்பு வழங்கினார்கள் என்று பார்க்க வேண்டும். அந்தமாதிரியான ஒரு நிலை இந்தத் தேர்தலிலும் ஏற்படும்.

### உதிரிகளை நம்பாதீர்கள்

இதேவேளை, கூட்டமைப்பில் இருந்து போனவர்கள் திரும்பி வரலாம் அதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று நான் கூடச் சொல்லியிருந்தேன்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவ்வாறாக வருவதற்கான சூழல் ஏற்படுமென்று எதிர்பார்க்கவில்லை. உதிரிகளாகப் போட்டி போடுகின்ற நிலைமைதான் ஏற்படுமென்று நம்புகின்றேன்.

உதிரிகளாகப் போட்டியிட்டாலும் நம்பி ஏமாறுகின்ற நிலைக்குப் போகாமல் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு.

மக்கள் நலன் சார்ந்து தேசிய நலன் சார்ந்து தமிழ்த் தேசிய இனம் சார்ந்து கூட்டமைப்பு என்ற கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும். அதற்கான ஆதரவை மக்கள் தர வேண்டும். ஆகவே விருப்பமில்லாதவர்கள் யாராவது இருந்தால் அவர்களைத் தவிர்த்து ஏனையவர்களைத் தெரியு செய்யுங்கள் .

எதற்காகவும் கட்சியைக் கைவிடாமல் கட்சிக்கு வாக்களியுங்கள். கட்சியை ஆதரிக்க வேண்டிய தேவை மக்களுக்கு இருக்கின்றது. அதனை மக்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்பது வரலாற்று அனுபவம்- என்றார். (த-20)

# சில காணிகளை விடுவித்துவிட்டு குடியமரவில்லை எனக் கூறாதீர்!

## மாகாண முன்னாள் உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 7

"படையினர் வசமிருந்த பொதுமக்களின் சில காணிகளை மட்டும் விடுவித்துவிட்டு மக்கள் மீளக் குடியமர்வதில் ஆர்வம் காட்டவில்லை என்ற இராணுவத் தளபதியின் கருத்தை ஏற்கமுடியாது. மக்கள் குடியமரவில்லை என்று காரணங்கூறி மக்களின் ஏனைய காணிகளைப் படையினர் வைத்திருக்க முடியாது. மக்களின் அனைத்துக் காணிகளையும் படையினரிடமிருந்து விடுவித்து மக்கள் மீளக் குடியமர்வதற்குரிய வசதிகளையும் அரசு ஏற்படுத்தவேண்டும்."

இவ்வாறு தெரிவித்துள்ளார், ரெலோ அமைப்பின் இளைஞரணிச் செயலாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பலர் தற்போதும் முகாம்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரிவருகின்றனர். தமது சொந்தநிலங்களில் மீளக்குடியமர்த்துமாறு கோரிவருகின்றனர். விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் சென்று மீளக் குடியமர்ந்து வருகின்றனர். அதற்கான வசதிகளை, வாழ்வாதார உதவிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதனை அரசு முழுமையாகச் செய்யுமிடத்தே அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் சிக்கலின்றி அங்குசென்று குடியமரமுடியும்.

அரசு தாம் செய்யவேண்டியவற்றைச் செய்யாமல்விட்டுமக்கள்மீளக்குடியமரவில்லை என்று கூறமுடியாது. விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளக் குடியமர்வ தற்குரிய முழுமையான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் அனைத்தும் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். இதனைத் தான் மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். இதைச் செய்யாமல் மக்களைக் குறை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது, காணிகளை விடுவிக்காமல் இருக்கமுடியாது- என்றார். (த-20)

# முகத் தோற்றத்துடன் தேங்காய்

யாழ்ப்பாணம், பெப்.7



தேங்காய் ஒன்றை உரித்தபோது, அந்தத் தேங்காய், முகம் ஒன்றின் தோற்றத்துடன் ஒத்துப்போகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை, துரையப்பா வீதியில் உள்ள வீட்டில் நேற்று சமைப்பதற்குத் தேங்காய் ஒன்று உரிக்கப்பட்டுள்ளது. இதன்போது. அந்தத் தேங்காயில், மனித முகத்தை ஒத்த அமைப்பு காணப்படுகிறது என்று குறித்த வீட்டின் உரிமையாளர் அதை பத்திரமாக வைத்து விட்டு பிறிதொரு தேங்காயை உரித்து சமையலுக்குப் பயன்படுத்தியுள்ளார். தேங்காயில் அவ்வாறனதொரு உருவம் காணப்பட்டதை இட்டு அந்த இளைஞர் அதிர்ச்சியடைந்ததையும், பதற்றமாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (ப)

# இரண்டு குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, பெப்.7

அரச கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி 24ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற தெரிவுக்குழு, 119 (1) நிலையியற் கட்டளைக்கு அமைய அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு 16 உறுப்பினர்களை நியமித்தது. அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு அமைச்சர்களான பவித்திரா வன்னியாராச்சி, டக்ளஸ் தேவானந்தா, வாசுதேவ நாணயக்கார இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க ரோஹித்த அபேகுணவர்த்தன, லசந்த அழகியவண்ண, ஷெஹான் சேமசிங்க, சந்திம வீரக்கொடி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, பாலித ரங்க பண்டார, நிரோஷன் பெரேரா, அலிசாஹிர் மௌலானா, புத்திக பத்திரன, எஸ்.சிறிதரன், டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, விஜயபால ஹெட்டியாராச்சி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், ஜனவரி 24ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற தெரிவுக்குழு, 120 (1) நிலையியற் கட்டளைக்கு அமைய அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு 16 பேரை நியமித்தது.

அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, ஜயந்த சமரவீர மற்றும் மொஹான் பிரியதர்ஷன.டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், விஜயதாச ராஜபக்ஷ, ஹர்ஷ.டி சில்வா, அஜித்.பி. பெரேரா, சிரியான விஜயவிக்ரம, ரஞ்சன் ராமநாயக்க, அசோக்க அபேசிங்க, சுனில் ஹந்துன்நெத்தி, மாவை சேனாதிராஜா மற்றும் டி.வி.சானக்க ஆகியோர் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-44)



## கட்டடத் திறப்பு விழா

சாவகச்சேரி,பெப்.7

மறவன்புலவு சிவகவி சனசமூக நிலையத்தின் தற்காலிக கட்டடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கட்டட நிதியுதவியாளர் திருமதி தி.புவனலட்சுமி, சிறப்பு விருந்தினராக நாவற்குழி உப பணிமனையின் பொறுப்பதிகாரி ஜெயகாந்தன், கௌரவ விருந்தினர்களாக ஜே/298 மறவன்புலவு கிராம அலுவலர் கு.தனபாலசிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)



## பாண்ட் வாத்திய கருவிகள் கையளிப்பு

கொடிகாமம்,பெப்.7

கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டன.

கைதடி நாவற்குழி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த என். நிருஜன் தலைமையிலான இளைஞர் குழு, ரோக்கியோ சிமெண்ட் மற்றும் மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கருவிகளை அன்பளிப்புச் செய்தன. (ஐ-159)

# பிணைமுறி விசாரணைகளை தேர்தலுக்கு முன் ஆரம்பிக்குக!

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, பெப்.7

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் அறிக்கையை மையமாகக் கொண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னதாக அந்த விவகாரம் தொடர்பிலான நீதி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

"பிணை முறி கொள்ளையின் கசப்பான உண்மை" என்ற தொனிப் பொருளில் மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கி ஆளுநராகப் பதவி வகித்த அஜித் நிவாட் கப்ரால் நாட்டிலிருந்து தப்பிச் செல்ல முடியாதவாறு அவருடைய கடவுச் சீட்டை தடுத்து வைப்பதற்கான உத்தரவை சட்டமா அதிபர் பிறப்பிக்கவேண்டும்.

இலவசக் கல்வியின் ஊடாக பெற்றுக் கொண்ட அறிவைப் பயன்படுத்தி இடம் பெற்ற மோசடியே பிணை முறி மோசடியாகும். இந்த மோசடியுடன் பாரபட்சமின்றி பிரதான கட்சிகளிரண்டும் தொடர்புபட்டுள்ளன.

ஜே.வி.பியை தவிர ஏனைய கட்சிகள் பிணைமுறி மோசடிக்காரர்களை பாதுகாக்க எத்தனிக்கின்றன.

இந்த விவகாரம் தொடர்பில் ஐந்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷ தரப்பினருடைய ஆட்சிக் காலத்திலும், ரணில் விக்கிரமசிங்க தரப்பினருடைய ஆட்சிக்காலத்திலுமே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் அவர்கள் அந்த மோசடியை மூடிமறைக்கும் வகையிலான செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

கணக்காய்வாளரென்பவர் சுயாதீனமான முறையில் செயற்படவேண்டியவராவார். நிறுவனமொன்றிற்கு நட்டமேற்படும் பட்சடத்தில் நட்டத்துக்கான காரணத்தை கண்டறிந்து அதனை சீர் செய்ய வேண்டியது அவருடைய பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் அவ்வாறாக இடம் பெற்றிருக்கவில்லை. அத்துடன் மோசடி தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மோசடி இடம் பெற்றிருக்கின்றமை காரணமாக நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டியதாக இருக்கும் அறிக்கையே தடயவியல் அறிக்கையாகும். அதைக் கொண்டு மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டியமை அவசியமானதாகும். அவ்வாறாக விசாரணைகளை ஆரம்பிக்காது காலம் கடத்தும் செயற்பாட்டையே கோத்தாபயதலைமையிலான அரசு மேற்கொண்டு வருகின்றது- என்றார். (எ)

# யாழ்.நோக்கிப் படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவையினங்கள்

படங்கள்: ஐ.சிவசாந்தன்







யாழ்ப்பாணம், பெப். 7


யாழ்ப்பாணம் கல்லுண்டாய் மற்றும் தீவகத்துக்கு பல ஆண்டுகளுக்கு பின்னர் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் பிளமிங்கோ உள்ளிட்ட வெளிநாட்டுப் பறவைகள் அதிகளவில் வந்துள்ளன.

இனப்பெருக்கம் மற்றும் பருவ நிலை மாற்றங்களை அனுபவிக்க வரும் அரிய வகை வெளிநாட்டு பறவைகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக குறைந்து காணப்பட்டன. எனினும் இந்தமுறை சீரான மழைவீழ்ச்சி காணப்பட்டதால் யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி கல்லுண்டாய் பகுதி மற்றும் தீவகம் அல்லைப்பிட்டி முதல் நாரந்தனை வரையான தரவைப் பகுதி ஆகியனவற்றில் இவற்றை அவதானிக்க முடிகின்றது.

சாம்பல் நாரை, அரிவாள் மூக்கன், புதிய வகையான ஆசிய ஓபன் பில் நாரைகள் அந்தப் பகுதியில் அதிகளவில் காணப்படுகின்றன. இந்த வகை நாரைகள் இந்திய துணைக் கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

நாரைகள் தமக்கு உணவுதேடி நீண்ட தூரம் பறக்கக் கூடியவை. தற்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து அதிகளவில் தனித்தனியாக ஆங்காங்கே





காணப்படுகின்றன. பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவற்றைப் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகி, மார்ச் மாதம் வரை இந்தப் பறவைகள் தமது நாடுகளிலிருந்து இனப்பெருக்கம் மற்றும் பருவ நிலை மாற்றங்களை அனுபவிக்க இடம்பெயர்ந்து செல்கின்றமை வழக்கமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

"ஏனைய பறவைகளை போல் பிளமிங்கோ பறவைகள் மீன்களைச் சாப்பிடமாட்டா. கடலில் உள்ள பாசிகளையே உணவாக உட்கொண்டு வாழும் சைவப் பறவை. ஏனைய பறவைகளை போல் மரங்களில் கூடு கட்டி வாழாது. தண்ணீரிலேயே நின்றபடியே தூங்கும்" என்று பறவைகள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (து)



## கோப், கோபா குழுக்கள் இன்று கூடும்

கொழும்பு, பெப்.7

அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான (கோப்) குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழு (கோபா) என்பன இன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடவுள்ளன. இதன் போது இந்தக் குழுக்களுக்கான தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கோப் மற்றும் கோபா குழுக்களுக்கான உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம்நியமிக்கப்பட்டனர். இது தொடர்பான அறிவித்தலை சபாநாயகர் விடுத்திருந்தார். இரு குழுக்களிலும் தலா 16 உறுப்பினர்கள் வீதம் அங்கம் வகிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்போது கோப் குழுவின் தலைவராக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி செயற்பட்டுவந்தார். கோபா குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்ன நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த முறையும் இவர்களே தலைவர்களாக நியமிக்கப்படலாம் எனவும், சிலவேளை, கோப் குழுவின் தலைவர் பதவியில் மாற்றம் வரலாம் என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (எ-44)

# மரக்கடத்தலை தடுக்க அலுவலர்கள் இல்லை!

முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனங்களில் சட்டவிரோதமாக ஏராளமான மரங்கள் அறுக்கப்பட்டுக் கடத்திச் செல்லப்படுகின்றமை அதிகரித்துள்ள நிலையில், இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அலுவலர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர் என்று மாவட்ட வனவளத்திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் 13 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று வனவளத் திணைக்கள வட்டார வன அதிகாரி து.கௌதமன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வள்ளிபுனம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டிச் செல்லப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகளுடன் வாகனம் மீட்கப்பட்டுள்ளது. கடத்தல்காரர் தப்பிச்சென்ற நிலையில் வாகனமும் வாகனத்திலிருந்து ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா பணமும் மீட்கப்பட்டிருந்தது.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் வெவ்வேறு சம்பவங்களில் 17 வாகனங்களுடன் 13 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதுவரை 7 வழக்குகள் நிறைவடைந்து இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது என்றும் கௌதமன் மேலும் தெரிவித்தார். (த-19)

## வலி.மேற்கு பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாடு

மூளாய்,பெப்.7

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வலி. மேற்குப் பிரதேச செயலகமும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக மாதாந்தம் கிராமம் கிராமமாக அனைத்து அலுவலர்களையும் இணைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது

இந்தக் கூட்டத்தில் நடவடிக்கை முன்னேற்றம் குறித்து களநிலை அலுவலர்கள் விளக்கமளித்துவருகின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஏற்படும் தடை மற்றும் தாமதங்களை நீக்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் கடந்த டிசெம்பர் மாதத்தை விட ஜனவரி மாதம் டெங்கு நோய் தொற்றுக்கு உட்பட்டவர்களது எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை முழுவதையும் கடந்த ஆண்டு உலுக்கிப்போட்டது டெங்கு. வடக்கு மாகாணத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. பன்பாதிப்புக்கும் உள்ளாகியிருந்தனர். இலங்கையிலேயே டெங்கு நோயாளர்கள் கூடிய மாவட்டங்களில் யாழ்ப்பாணம் இரண்டாவது நிலையில் இருந்தது. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு, உள்ளிட்ட அரச திணைக்களங்கள் களத்தில் இறங்கின. பொது மக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. அதனடிப்படையில் டெங்கின் தாக்கம் சற்றுக் குறைந்தது. (ஐ-121)

## போதையில் சாரத்தியம்; ரூபா 50,000 தண்டம்

தலைமன்னார், பெப். 7

மது போதையில் சாரதி அனுமதி பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு மன்னார் நீதிமன்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கடந்த புதன்கிழமை அவர் பொலிஸாரிடம் சிக்கினார். நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்டார். தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதையடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது. இதுதவிர, இதே குற்றச்சாட்டில் மற்றொருவர் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

மதுபோதையில் வாகனம் ஓடியதை ஏற்றுக்கொண்ட அவர், சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளது என்று நீதி மன்றில் காட்டினார். அதையடுத்து முதலாவது குற்றத்துக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து எச்சரித்தது நீதிமன்று.

இன்னுமொருவர் மது போதையில் முச்சக்கர வண்டி செலுத்திய குற்றத்தை நீதிமன்றில் ஏற்றுக்கொண்டார். அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மற்றொருவர், உடைந்த சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்துக்கொண்டு வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்த வழக்கில் அவரை எச்சரித்து விடுதலை செய்தார் நீதிவான் மா.கணேசராஜா. (த-60)

## திருமுறை விழாவில் பலருக்கு கௌரவ விருது

யாழ். இந்து சமயப் பேரவையில் நாளை மறுதினம் ஞாயிறன்று நடைபெறவுள்ள திருமுறை விழாவில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்குக் கௌரவ விருதுகள் வழங்கப்படவுள்ளன.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் கு.சரவணபவானந்தன், சைவப்பாதுகாப்புச் சபைத் தலைவர் இ.திருவாதவூரன் ஆகியோருக்கு 'திருமுறைக் காவலர்' விருதும்,

மன்னாரைச் சேர்ந்த அர்ச்சுனராஜா நற்குகனுக்கு 'திருமுறைச் செல்வர்' விருதும்,சுழிபுரத்தைச் சேர்ந்த ஆ.ஆனந்தவடிவேலு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நடராஜா தங்கராஜா,கந்தர்மடத்தைச் சேர்ந்த செ.சிவபுரநாதன், சுதுமலையைச் சேர்ந்த பொ.பாலசிங்கம், நல்லூரைச் சேர்ந்த ப.பாலசுப்ரமணியம்,திருநெல்வேலியைச் சேர்ந்த .ந.சர்வ குணசீலன் ஆகியோருக்கு 'திருமுறைப் பராயணச் செல்வர்' எனும் விருதும்,

யாழ்பாணத்தைச் சேர்ந்த திருமதி. ரி.பத்மநாதன், திருமதி.ஆ.புஸ்பவதி, சுண்டுக்குழியைச்சேர்ந்த திருமதி.திலகவதி ஆறுமுகம், புத்தூரைச்சேர்ந்த இராமலிங்வல்லிபுரம் ஆகியோருக்கு 'திரு முறைப் பராயணச் செல்வி' எனும் விருதும், வே.விநாசித்தம்பிக்கு பொற்கிழியும், தமிழ் நாட்டைச் சேர்ந்த பண்ணிசைக் கலைஞர்களான புகழேந்தி மகேஸ்வரனுக்கு 'தேவார இசைஞானத் திலகம்'எனும் விருதும், கோகுலாசாரி ஸ்ரீராமுக்கு 'இசைஞானத் திலகம்' எனும் விருதும், தியாகராஜன் மோகன் ராஜாவுக்கு "லய ஞானதிலகம்" எனும் விருதும், சண்முகம் விஷ்ணுவுக்கு 'பண்ணிசைச் செல்வர்' என்னும் விருதும் வழங்கப்படவுள்ளன. (க)



## மெய்கண்டானுக்கு கணினிகள்

யாழ்ப்பாணம், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்துக்கு இரண்டு கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இதனால், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் தேவைப்பாடாக இருந்த கணினிப் பற்றாக்குறை ஓரளவு தீர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியையும், பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் நேற்றைய தினம், அந்தக் கணினிகளை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கினார். பழைய மாணவியும், ஓய்வு பெற்ற ஆசிரியையுமான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியத்துக்கு பாடசாலைச் சமூகம் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டது. (ப)

## ஒட்டுசுட்டானில் விவசாயிகள் நெல் அறுவடைக்கு படும்பாடு

முல்லைத்தீவு, பெப்.7

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்குமுகம்கொடுத்து வருகின்றனர், விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கால போக நெற் செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலை யில், தமது வயல்களின் நெல்லை அறுவடைசெய்வதற்கு இயந்திரங்கள் இல்லாதமையால் விவசாயிகள் தற்போது சிரமப்படு கின்றனர்.

ஒட்டுசுட்டானில் அதிகளவான விவசாயிகள், நெற் செய்கையில் ஆர்வம் காட்டியமையால், பெருமளவு விதைப்புக்கள் அங்கு இடம்பெற்றிருந்தன. எனினும், விதைக்கப்பட்ட நெல்லை அறுவடை செய்வதற்கு போதிய இயந்திரங்கள் ஒட்டுசுட்டானில் இல்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஓரிரு இயந்திரங்கள் அறுவடையில் ஈடுபட்டுள்ளமையால், அவர்கள் கேட்கும் பணத்தை வழங்கவேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அறுவடைக்குப் பெருமளவு பணத்தைக் கொடுத்தால், விவசாயத்தில் நட்டம் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறுவடையின் பின் நெல்லைக் காயவிடுவதற்கு, நெல் காயவிடும் தளம் இன்மையால், அறுவடைமுடிந்தவுடன் நெல் காயவிடாது அப்படியே விற்பனை செய்யப்படுகிறது. இதனால், குறைந்தளவுவிலைக்கே விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 75 கிலோவைக் கொண்ட ஒரு மூடை கோறா நெல்லினம் 3ஆயிரம் ரூபாவுக்கும், சம்பா 3ஆயிரத்து 200 ரூபாவுக்கும், கொள்வனவு செய்யப்படுகிறது.

எனவே விவசாயிகளுடைய பாதிப்பைக் குறைப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களது குறைகளைத் தீர்த்துவைத்து, அடுத்த சந்ததியும் விவசாயம் செய்வதற்கான வழியை ஏற்படுத்தவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-500)

## வர்த்தக ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும் அரசு

கொழும்பு, பெப்.7

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் மீளாய்வு செய்ய அரசு தீர்மானித்துள்ளது என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட 8 பிரிவினர் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போதே இந்த விடயம் சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த மனுக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (எ)

# சிங்களம், தமிழ் வேண்டாம் ஆங்கிலம் மட்டுமே போதும்

## கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க ஆலோசனை



கொழும்பு, பெப்.7

ஆரம்பகாலத்தில் ஆங்கில மொழியே போதனா மொழியாகக் கற்பிக்கப்பட்டது. அப்போது மக்களுக்கிடையில் எந்த வித பாகுபாடும் காணப்படவில்லை. ஆனால் சிங்களம் மற்றும் தமிழ் போதனா மொழியாகக் கற்பிக்கப்பட்டதை அடுத்தே பிளவுகள் தோற்றம் பெற்றன. அதனால்தான் நாட்டில் போர் இடம்பெற்றது.

இவ்வாறு அமைச்சுகளுக்கான செயலாளர்களின் தேசிய அமைப்பின் தலைவர் கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க தெரிவித்தார். கொழும்பு வொன்டர் விடுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாடு சுதந்திரம் அடைந்து 72 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக இருக்கின்றார்களா? அவர்களிடத்தில் நல்லிணக்கம் பேணப்படுகின்றதா? என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் மத்தியில் பிளவு வருவதற்குக் காரணம் என்ன என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஒரு மொழியைப் போதனா மொழியாக கற்பிப்பதே சிறந்தது. ஆங்கிலத்தை நாம் போதனா மொழியாகக் கற்பித்தால், உலகளாவிய ரீதியில் எம்மால் போட்டியிட முடிவதுடன், பொருளாதாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஆங்கிலக் கல்வியைப் பெறமுடியாது இருப்பது சாதாரண மக்களின் பிள்ளைகளே. அவர்களால் இணையத்தைக் கூட முறையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கிலத்தைப் போதனா மொழியாக மாற்றினால் இவர்களது கல்வி வளர்ச்சியையும் அதிகரிக்கமுடியும். இதுதொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது தான் நாம் நாட்டில் நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியும். கொழும்பு மற்றும் கொழும்பு நகரத்துக்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருந்திச் செயற்பாடுகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால் மக்கள் பெரிதும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (எ)

# மக்களுக்கு சிரமம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கே ஆர்ப்பாட்ட இடம்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

போராட்டத்தின் போது அரச சொத்துக்களுக்கும், பொது மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காகவே போராட்டத்தை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி காலி முகத்திடலில் பிரத்தியேகமாக ஓர் இடத்தை ஒதுக்கியுள்ளார். எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் போராட்டத்தை இனி அந்த இடத்தில் முன்னெடுக்கலாம்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழிற் சங்கத்தினர் ஆகியோர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். கொழும்பு நகரைப் பிரதானமாக கொண்டு முன்னெடுக்கப்படும் போராட்டங்களால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

ஜனாதிபதி செயலகப் பிரிவு, லோட்டஸ் சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளில் இந்த நிலைமை அதிகளவில் உள்ளது. ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்பவர்கள் எல்லை மீறி செயற்படும்போது பொலிஸார் அவர்களைக் கட்டுப்படுத்த கண்ணீர் புகைப் பிரயோகம், தடியடி உள்ளிட்ட தாக்குதல்களை முன்னெடுக்க வேண்டிய தேவ்வை ஏற்படும். அதனால் அரச சொத்துக்கள் பெருமளவில் கடந்த காலங்களில் பாதிப்படைந்துள்ளன.

போராட்டங்களை அரச அதிகாரம் கொண்டு தடை செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அது மாறுப்பட்ட கருத்தைத் தோற்றுவிக்கும். இவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டகாரர்கள் எவருக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் போராட்டத்தை முன்னெடுக்க பிரத்தியேகமாக இடத்தை ஒதுக்கியுள்ளார்.

ஆர்ப்பாட்ட இடம் என்று மும்மொழியிலும் எழுதப்பட்ட பெயர்பலகை அங்கு உள்ளது. இனிமேல் ஆர்ப்பாட்டகாரர்கள் எவருக்கும் எந்தவித தடைகளும் ஏற்படுத்தாமல் எவ்வளவுநேரமும் போராட்டத்தை முன்னெடுக்கலாம். எவரும் தடைகளை ஏற்படுத்த மாட்டோம். இவ்வாறான செயற்பாட்டால் போராட்டங்களை கவனிக்காது விடுவது அரசின் நோக்கமல்ல, நியாயமான கோரிக்கைகளுக்கு நிரந்தர தீர்வை, நியாயமான பேச்சுகள் ஊடாக பெற்றுக் கொடுப்போம். என்றார். (எ)

# கிலோ 50 ரூபாவுக்கு நெல் கொள்வனவு


## சந்தைப்படுத்த வவுனியா விவசாயிகள் ஆர்வம்

வவுனியா, பெப்.7

கால போகப் பயிர்ச் செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நெல்கொள்வனவு நடவடிக்கைகளில் நெல் சந்தைப் படுத்தும் அதிகார சபை ஈடுபட்டுள்ளது. வவுனியாவில் ஒரு கிலோ கிராம் நெல் 50ரூபாவுக்குக்கொள்வனவுசெய்யப்படுகிறது. நெல்லைக் சந்தைப் படுத்துவதற்கு வவுனியாவைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றமையையும் அவதானிக்க முடிந்தது. வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள நெல் களஞ்சியசாலையில் நேற்றுக் காலை நெல்கொள்வனவு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த வருடங்களில் நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராம் 38 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 41 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தத் தடவை அனைத்து ரக நெல்லுக்கும் ஆகக்கூடிய விலை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய நெல் சந்தைப் படுத்தும் சபை ஒரு கிலோகிராம் நெல்லை 50 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கிறது. வவுனியாவைச் சேர்ந்த விவசாயிகள் பலர் ஆர்வத்துடன் தமது நெல்லை சந்தைப்படுத்த முன்வந்தமையை அவதானிக்க முடிந்தது. விவசாயிகளுக்கு விசேட சலுகைகளாக முதல் தடவையாக ஈரத்தன்மையுடன் கூடிய நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டது. (ஐ-18)





# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.7

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் காலை, மாலை அபிஷேகம், கொடித்தம்ப பூசை, வசந்த மண்டப் பூசை என்பன நடைபெறும்.

தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்வமும் நடைபெறும். (க)

# கூட்டுறவு அபிவிருத்திகள் பற்றி அதிகாரிகள் நேரில் ஆராய்வர்

யாழ்ப்பாணம், பெப். 7

வடக்கில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகள் போன்றனவற்றை மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் விரைவில் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் திணை க்களத்தின் கூட்டுறவுப் பரிணமிப்பு வேலைத் திட்டத்தின் ஊடாகவும் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் அதற்கான அபிவிருத்திகள் குறித்தும் திணைக்களம் போதிய கவனம் செலுத்தியிருந்தது.

2019 ஆம் ஆண்டில் அநேகமான சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் குறித்து திணைக்கள அதிகாரிகள் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு சங்கங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

நலிவுற்ற கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் குறித்து அதிகளவில் கலந்துரையாடப்பட்டுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு அதிகாரிகள் ஆலோசனை வழங்கியிருந்தார்கள்.

வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதோடு ஏனைய அபிவிருத்தித் திட்டங்க ளையும் சங்கங்கள் முன்கொண்டு செல்லவும் ஆலோசனை வழங்கப்பட்டது. தற்போதைய நிலையிலும் வடக்கின் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் யாவற்றையும் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக சங்கங்களின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி மற்றும் வேலைத்திட்டங்களை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காக சங்கச் செயற்பாடுகள் குறித்து நேரில் களப் பயணம் மேற்கொள்ளவும் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் திட்டமிட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-17)

# கட்சிகளின் பிரச்சினையை விட நாட்டுப் பிரச்சினை முக்கியம்!

## மைத்திரி அறிவுரை



கொழும்பு, பெப்.7

கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடவும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குமே தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொலனறுவையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதால் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது. இன்று அனைவரும் அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றியே அதிகமாக பேசுகின்றனர். அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள மோதல்கள் அல்ல நாட்டின் பிரச்சினை. மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினை களே நாட்டின் பிரச்சினை யாகும்.

அவற்றுக்கே நாம் முக்கியத்து வம ளிக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்திருந்தோம். பொதுஜன பெரமுனவுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு ஆதரவளித்திருந்தோம்.

அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே எதிர்கால நடவடிக்கைகளும் அமைய வேண்டும்-என்றார். (எ-24)

## அனைத்து தரப்பினருக்கும் ஊடகங்களில் சம உரிமை!

### பந்துல கூறுகின்றார்

கொழும்பு, பெப்.7

அரசு எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்றில்லாது அரச ஊடகங்களில் அனைவருக்கும் சமமான உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் என்று உயர் கல்வி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 57 வானொலி அலைவரிசைகள் இயங்குகின்றன. அதில் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டு இயங்காத நிலையில் 4 அலைவரிசைகள் உள்ளன. கடந்த அரசின் காலத்தில் ராஜபக் ஷக்களுக்குச் சேறு பூசும் வகையிலும் எதிர்க்கட்சியுடன் குரோதம் ஏற்படுத்தும் வகையிலும் அரச ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்தக் காலத்தில் எதிர் க்கட்சியினருக்கு தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரச வானொலிகளில் இடமளிப்பதில்லை. ஆனாலும் எமது அரசில் அதற்கான எந்த தடையும் கிடையாது.

ஆளும் கட்சியினருக்கு எதிர்க்கட்சியினருக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசில் சேறுபூசும் செயற்பாடுகளுக்கு இடமில்லை. சிறந்த ஊடகக் கலாசாரம் ஒன்றை உருவாக்கும் வகையில் அரசியல் ரீதியில் அல்லாத சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டு மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றன. பின்னர் அதனை ஒரு சட்டமாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ)

## டொலருடன் கைதானோருக்கு இன்றுவரை பொலிஸ் தடுப்பு!

தலைமன்னார், பெப். 7

அமெரிக்க டொலர் நோட்டுக்களைக் கொண்டுசென்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரையும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரையும் இன்றுவரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்குமாறு மன்னார் நீதிமன்று நேற்றுமுன்தினம் பணித்தது.

கடந்த செவ்வாய் கிழமை தலைமன்னாரைச் சேர்ந்த ஒருவர் தனது மோட்டார் சைக்கிள் இருக்கைக்குள் 71,750 பெறுமதியான டொலர்ஸ் பண நோட்டுக்களை மறைத்துக் கொண்டுசென்றபோது தலைமன்னார் மன்னார் பிரதான வீதியிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் கைதுசெய்யப்பட்டார். அவர் மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். விசாரணையில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டிருந்தார். சந்தேக நபர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் முற்படுத்தினர். எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை தங்களின் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த பொலிஸார் மன்றிடம் அனுமதி கோரினர்.

சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணிகளான பா.டெனிஸ்வரன், செ.டினேஸ் ஆகியோர் தங்கள் வாதங்களை முன்வை த்தனர். ஐந்து பேர் கொண்ட குழுவினர் வெளிநாட்டுக்கு அட்டை ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

டொலரின் பெறுமதி குறைந்தமையால் இவர்கள் பணத்தை மாற்றிச் செலவழிக்காது திருப்பிக்கொண்டு சென்றபோதே இது கைப்பற்றப்பட்டு ள்ளது. ஒருவர் எவ்வளவு தொகையை அந்நியச்செலவணியாக வைத்திருக்கலாம் என்று வரையறை இல்லை என்று தெரிவித்தனர். இருதரப்பு வாதங்களையும் அவதானித்த நீதிவான் சந்தேகநபர்களை இன்றுவரை பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கினார். (த-60)



## அபிவிருத்திக்கான பின்புலம் கோத்தாவால் உருவானதாம்!

### சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

கடந்தகால தவறுகளை மறுசீரமைத்துக் கொண்டு மக்களுக்கு அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான பின்புலத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கரந்தெனிய பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஐக்கிய தேசியக் கட்சியின் அரசின் காலத்தில் பரப்புரைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில். சமகால அரசு மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கிறது. இதுதான் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின் இந்த நிதியையும் தமது பரப்புரை நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தியிருப்பார்கள். எமது அரசு பரப்புரை நடவடிக்கைகளுக்காக மக்கள் பணத்தை வீண் விரயம் செய்யாது. அந்த நிதிகள் அனைத்தும் மக்களின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படும்.

கடந்தகாலத்தில் ஏற்பட்ட தவறுகளை திருத்திக்கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்கிறோம். அதற்கான பின்புலத்தை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். எதிர்வரும் ஆண்டுகள் மக்களுக்கு பொருளாதார சுபீட்சத்தை பெற்றுக்கொடுக்கும் ஆண்டுகளாக அமையும்.என்றார். (எ-24)



சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குப் பிராந்திய அலுவலகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரன் மரக்கன்றுகளை நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (க-17)

## அராலித்துறையில் கடற்படைக்கு காணி

யாழ்ப்பாணம், பெப். 7

வலிகாமம் மேற்கு அராலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடற்படையினர் நிரந்தர முகாம் அமைக்க காணி வழங்கப்பட்டுள்ளது.

அராலித்துறைகூற்றுக்கு அண்மையாகவுள்ள 6 பரப்பு அரச காணி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியை கடற்படைக்கு வழங்குவதற்கு 2014ஆம் ஆண்டே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (ஓ.5,121)

## வீதியைக் கடந்த நடத்துநர் காயம்

வவுனியா, பெப். 7

வவுனியா நெடுங்கேணி பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் பேருந்து நடத்துநர் காயமடைந்துமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து வவுனியா நோக்கிச்சென்றதனியார் பேருந்து நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயத்தில் வழிபாட்டுக்காக நிறுத்தப்பட்டபோது நடத்துநர் வீதியைக் கடந்தார். அதன்போதே திருகோணமலையிலிருந்து முல்லைதீவு நோக்கிப் பயணித்த கார் அவரை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. அவர் நெடுங்கேணி பிரதேச மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். (து-110)

## தைப்பூச உற்சவம்

அளவெட்டி,பெப்.7

யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு மன்னதோட்ட ஜெகசோதி அம்பாள் ஆலயத்தில் தைப்பூச உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி அம்பாள் வீதியுலா வரும் காட்சி நடைபெறும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூரணத் திருவிழாவும் அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும். (ஐ-63)

*** *** ***

சாவகச்சேரி,பெப்.7

எழுதுமட்டுவாள் விளுபளை அம்பாள் கோவிலில் அமைந்துள்ள முருகன் கோவிலில் தைப்பூச உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிசேகம். இடம்பெற்று எம்பெருமான் வீதி உலா வருவார் என்று கோவில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.7

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர பிரதி ஆணையாளர் து.ஈசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)





## கொரோனா நீங்கவேண்டி மன்னாரில் 'பிரித்' ஓதல்

மன்னார், பெப். 7

நாடு முழுவதும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள 'கொரோனா' வைரஸ் தாக்கம் நாட்டிலிருந்து முழுமையாக நீங்கவேண்டும் என்றும், வைரஸால் பாதிக்கப்பட்ட அனைவரும் சுகம்பெற வேண்டியும் விசேட பூஜை மற்றும் 'பிரித்' ஓதல் நடைபெற்றன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக மன்னார் மற்றும் அநுராதபுரத்தில் உள்ள 12 பௌத்த பிக்குகளை அழைத்து விசேட 'பிரித்' ஓதுதல் நடைபெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன், அதிபர் மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், அரச அலுவலர்கள்,பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (து-56)

## விளையாட்டு நிகழ்வும் சிறுவர் முற்றம் திறப்பும்

யாழ்ப்பாணம் புத்தூர் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வும், சிறுவர் விளையாட்டு முற்றம் திறப்பும் வித்தியாலய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சு.தனறூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் பொ.வரதகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

## "தொதலால்" வழக்கு!

### மன்னார் நீதிமன்றில் சுவாரஸ்யம்

கடமை செய்யச் சென்ற நுகர்வோர் அத்தியாவசிய புலன் விசாரணை அதிகாரிகளை தாக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடை உரிமையாளர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார். இப்படியொரு வழக்கு ஏற்பட அடிப்படைக் காரணம், 'தொதல்' சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்காததுதானா? என்ற நிலை ஏற்பட்டபோது வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன்போதே 'தொதல்' கதை முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட நுகர்வோர் அத்தியாவசிய புலன் விசாரணை அதிகாரி தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் வியாழக்கிழமை மன்னார் மடு வீதிச் சந்தியில் இனிப்புப் பண்டங்கள் விற்கும் கடைக்குச் சென்றுள்ளனர். உணவுப் பண்டங்களைப் பரிசோதனை செய்ய முற்பட்டபோது கடை உரிமையாளர் கடமை செய்யவிடாது கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டிய புலன் விசாரணை அதிகாரிகள், இது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதன்படி மறுநாள் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றினூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகளான பா.டெனிஸ்வரன், செ.டினேசன் ஆகியோர் முற்பட்டிருந்தனர். வழக்காளி சார்பாக சட்டத்தரணி ஏ.டபிள்யூ.அர்ஜுன் முற்பட்டிருந்தார். "அரச அதிகாரிகளுக்குச் சந்தேக நபர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இவரைப் பிணையில் விடுவிக்க வேண்டாம்" என்று அவர் வாதிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் முற்பட்டிருந்த சட்டத்தரணிகள் அதை மறுத்து, "சந்தேக நபர் கொலை அச்சுறுத்தல் விடுக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரிகள் சந்தேகநபரின் கடைக்குச்சென்று 150 ரூபாவுக்கு 'தொதல்' வாங்கிச் சாப்பிட்டுள்ளனர். அதற்குரிய பணத்தை சந்தேகநபரான கடைக்காரர் கேட்டபோது, அதிகாரிகள் தங்களை அடையாளம் காட்டியுள்ளனர். இதன்போது பண விடயத்தில் இரு பகுதியினருக்கும் இடையே கருத்துமோதல் ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் 'தொதல்' வாங்கிச் சாப்பிட்டுப் பணம் வழங்காததாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டது" என்று தெரிவித்தனர்.

அதனால் இருதரப்புச் சட்டத்தரணிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதங்கள் நீண்டன. ஒரு கட்டத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். சபூர்தீன் இரு பகுதி சட்டத்தரணிகளையும் அமைதிப் படுத்துவதில் கரிசனைகாட்டினார். இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிவான் கணேசராஜா, சந்தேகநபரைப் பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தார். (து-60)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி அருள்நாதன்
**மோகனப்பிரியா**
(பவாக்குட்டி)

தோற்றம்: 01.10.2005
மறைவு: 19.01.2019



உம் நினைவுகள் எம்
நெஞ்சினில் என்றும் நிலைத்திருக்கும்
மாமா - ரவி
A9 வீதி, குஞ்சுக்குளம்,
மாங்குளம்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஸ்ரீலதா கோவிந்தராசா
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி சின்னம்மா கணபதி**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(IN/12492)(11,17)

## மரண அறிவித்தல்

### கனகசபை சந்திரமௌலீசன்

(இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சந்திரமௌலீசன் கடந்த 31.01.2020 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பாக்கியலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -நாகம்மா தம்பதிகளின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரபாஸ்கரன், அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகிழ் மலர் மற்றும் செல்வராணி, இராமச்சந்திரன், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நிர்மலா, ரூபகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாதவன், மதுவாகித்தா, அஷோரி ஆகியோரின் அன்புப் பேரனும், மாணிக்கவாசகர் குலேந்திரசிங்கம், அம்பிகைதேவி, உமாபிரியவானதி, கங்காதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சுமுகநாதன், முருகானந்தன் ஆகியோரின் மைத்துனரும், ஞானப்பிரகாசம் - வசந்தாதேவி தம்பதிகளினதும் சிவசுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதிகளினதும் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2020 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**குடும்பத்தினர்.**

(CS/31075)(11,17)

சுரேஸ் (மகன்) - +447956 4672971
அபிராமி (மகள்) - +44 785 737 3521

# பொருளாதாரம் 'ஐ.சி.யூ'வில்! பொங்கியெழுந்த அமைச்சர்!!



கொழும்பு, பெப்.7

**பொதுச் செயலாளர் ஒருவரை நியமிக்க முடியாமல் திண்டாடும் ஐக்கிய தேசியக்கட்சி, பொருளாதாரத் திண்டாட்டம் பற்றி கதைப்பது நகைப்புக்குரிய விடயமாகும் என்று இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

**நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுதாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று உட்பட பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் சிறப்பு வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின்கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான விவாதம் ஆரம்பமானது.**

அந்த விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பொருளாதாரத் திட்டங்களை கடுமையாக விமர்சித்தமையுடன், நாட்டின் பொருளாதாரம் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

அதேபோல் தேர்தலை மையப்படுத்தி நடைமுறைக்கு சாத்தியமற்ற சில வாக்குறுதிகளை அரசு வழங்குகின்றது என்றும், அரசின் இயலாமை தற்போதே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. நாட்டில் அனைத்து விதமான பொருள்களின் விலைகளும் உச்சம் தொட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.

மங்கள சமரவீரவின் உரை முடிவடைந்த பின்னர் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உரையாற்றினார்.

மங்கள சமரவீர போன்ற அமைச்சரால்தான் ஐக்கிய தேசியக்கட்சி அரசு இல்லாமல்போனது. போர்க் குற்ற விசாரணைக்கு இணை அனுசரணை வழங்க நடவடிக்கை எடுத்தார். நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தார். இப்படி பல விடயங்களைஅன்றுசெய்துவிட்டு இன்று எமது அரசை விமர்சிக்கின்றார். நாட்டு வளங்களை கொள்ளையடித்து மக்களை வதைக்கும் ஆட்சியையே ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்தது. ஆனால், மக்களுக்கு நிவாரணமளிக்கும் ஆட்சியையே நாம் முன்னெடுத்துவருகின்றோம்.

இன்றுஉட்கட்சிபிரச்சினையால் ஐக்கிய தேசியக்கட்சிதான் திண்டாடுகின்றது. கூட்டணிக்கு பொதுச்செயலாளர் ஒருவரைக் கூட நியமிக்க முடியாமல் அக்கட்சி உறுப்பினர்கள் தடுமாறுகின்றனர். ரஞ்சித் மத்துப பண்டாரவை நியமித்தால் ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் இணைவார்கள் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கூட்டணியின் பெயர், சின்னம் என்பதைக்கூட தீர்மானிக்க வழியில்லாமல் திண்டாடும் ஐக்கிய தேசியக் கட்சியினர், நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி கதைப்பதற்கு முன்னர் கட்சிக்குள் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்க்க வழிதேட வேண்டும். - என்றார்.

மங்கள சமரவீர, மஹிந்தானந்த ஆகியோர் உரையாற்றுகையில் ஆளும் மற்றும் எதிரணிஉறுப்பினர்களிடையே அவ்வப்போது சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.(எ-44)



## ரிப்கானின் மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.7

காணி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரிப்கான் பதியுதீனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் 78 ஏக்கர் காணி மோசடி தொடர்பில் ரிப்கான் பதியுதீன் குற்றவியல் புலனாய்வுத் துறையால் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கொழும்பு மேலதிக நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். அவரை பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கொழும்பு மேலதிக நீதிவான் ரிப்கான் பதியுதீனை பெப்ரவரி 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ)

## முரண்பாட்டைத் தவிர்க்கவே 19ஐ திருத்த நடவடிக்கை!

### ஸ்ரீசுதந்திரக் கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையே ஏற்படக் கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கத்திலேயே 19 ஆவது அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுக்கும் இடை யில் காணப்படும் அதிகார முரண்பாடு காரணமாகவே 19 இல் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதில் எவ்வித உண்மையும் கிடையாது. தற்போதைய பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் அவ்வாறு எவ்வித முரண்பாடும் கிடையாது.

எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரக்கூடியவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. கடந்த ஆட்சி காலத்தில் மைத்திரி ரணில் முரண்பாடு அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். எதிர்காலத்தில் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பிரச்சினை இருப்பதாகக் கூறும் ஐக்கிய தேசியக் கட்சி தமக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு இன்னமும் தீர்வுகாணாமல் இருக்கிறது. கட்சி தலைவர் ரணில், கூட்டணி தலைவர் சஜித் என்று புரியாத கதையைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரது தரப்பிலும் இரு குழுக்கள் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றாமை தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர் பொலன்னறுவையில் இருந்தமையால் தன்னால் நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமல் போனது என்பதை அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் இருக்கின்றார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் கடந்த ஜனா திபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக் ஷவுக்கு ஆதரவளித்துப் பெரும் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தோம். அவரது வெற்றியில் சுதந்திர கட்சி பெரும் பங்காற்றியுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. சுமார் 15 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து வெற்றியை உறுதிப்படுத்தியசுதந்திரகட்சியைசிலர்புறக்கணிக்கஎண்ணுவது கவலைக்குரிய விடயம் - என்றார்.(எ)

## சீனாவைக் கைவிடோம் பவித்திரா கூறுகின்றார்



கொழும்பு, பெப்.7

நாட்டின் தலைவர்களான கோத்தாபய ராஜபக்ஷ மஹிந்த ராஜபக் ஷவுடன் மிகவும் நெருக்கமான நாடான சீனாவை இப்போது கைவிட இலங்கைதயாராக இல்லை என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பாக மக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை. இது இலங்கையில் பரவுவதற்கான எந்தவித நிலைமையும் ஏற்படவில்லை. ஆரோக்கியமானவர்கள் இந்த நோய் பரவும் என்று முகக் கவசங்களை அணிய வேண்டிய அவசியம் இருப்பதாகவும் நான் நம்பவில்லை.

தேவையான முகக் கவசங்களை சந்தைகளுக்கு வழங்குவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலவசமாக முகக் கவசங்களை வழங்கும் வகையில் அவசர நிலைமை ஏற்படுமாக இருந்தால் அவற்றை வழங்க நடவடிக்கையெடுப்போம். அவ்வாறாக இலவசமாக முகக் கவசங்களை வழங்கும் தேவை ஏற்படவில்லை என்றே கூறுகின்றோம்.

தற்போது இந்த வைரஸ் தொற்றுக் காரணமாக சீனாவால் தமது நாட்டவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டுபயணகட்டுப்பாடுகளால் இலங்கையில் சுற்றுலாத் துறைக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

சீன அரசு இலங்கைக்கு மிகவும் நெருக்கமான நாடாகும். இலங்கைக்கான பல்வேறு உதவிகளை செய்துள்ளது. போர்க் காலத்தில் நேரடியாக இலங்கைக்கு உதவியுள்ளது. போர்க் காலத்தில் இரட்டை நிலைப்பாடு எடுக்காது நேரடியாகக் கைகொடுத்த நாடாகும். இலங்கைக்கு நட்புறவான நெருக்கமான நாடாகச் சீனாவே உள்ளதாக நாம் கருதுகின்றோம். எமது தலைவர்களான மஹிந்த ராஜபக் ஷ கோத்தாபய ராஜபக் ஷவுடன் நெருக்கமான நட்புறவை பேணும் நாடாக சீனா செயற்பட்டு வருகின்றது. இதனால் இந்த நேரத்தில் சீனாவுடன் நாம் இருக்க வேண்டும். நாம் நெருக்கடியில் இருந்த காலத்தில் எமக்கு உதவிய நாட்டை இப்போது இந்த வைரஸ் காரணங்களை சுட்டிக்காட்டி சீனாவைத் தனிமைப்படுத்திவிடக் கூடாது - என்றார். (எ)

# வேலை வாய்ப்பு வழங்க அமைச்சரவை அனுமதி!

**கொழும்பு, பெப்.7**

**50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



**அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

2012 முதல் 2019 வரை பட்டப்படிப்பை முடித்த பட்டதாரிகளுக்கு, உள்வாரி மற்றும் வெளிவாரி என்ற பேதமின்றி வேலைவாய்ப்பு வழங்கப்படும். பாடசாலை ஆசிரியர்கள், நீர்ப்பாசனம், விவசாய அபிவிருத்தி, கணக்கெடுப்புத்துறை மற்றும் அமைச்சகங்களின் உள்ள வெற்றிடங்களில் மார்ச் முதலாம் திகதி முதல் ஆள்சேர்ப்பு செய்யப்படும். அவர்களுக்கு ஓராண்டு பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் ஐந்து வருடம் அந்த துறைகளில் கட்டாயமாக பணியாற்ற வேண்டும்- என்றார். (எ)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.7

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் சி.இந்திரகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மடுக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.லோகேஸ்வரன் கலந்து கொள்வார். (க-70)

+++

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இரத்தினம் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுப்பிரமணியம் சிவகுமாரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ பணிமனை பொது சுகாதாரப் பரிசோதகர் பாலசிங்கம் சஞ்சீவன், கௌரவ விருந்தினராக பழைய மாணவியும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியையுமான திருமதி. சுபாஷினி சண்முகராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

+++

கரணவாய்,பெப்.7

வடமராட்சி கம்பர்மலை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வ.ரமணசுதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொள்வார். (ஐ-108)

## கொரோனா மருந்து என விற்கப்படுபவை போலி!

### ஆயுர்வேத வைத்தியர் சங்க மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.7

கொரோனா வைரஸ் தொற்றை குணப்படுத்தும் என்று பரப்புரை செய்யப்பட்டுக் கடைகளில் விற்பனையாகும் மருந்துகளை நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அரச ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தின் மருத்துவர் டெனிஸ்டர் எல்.பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வைரஸ் என்பது விஞ்ஞானத் துறை மற்றும் மருத்துவத் துறைக்கு எப்போதுமே பெரும் சவாலான ஒரு விடயமாகும். ஆனால் கொரோனாவை கட்டுப்படுத்துவன என்று கூறி இலங்கையில் மருந்துகள் விற்பனையாகின்றன. கொரோனா போன்ற வைரஸை நுண்ணுயிர் கொல்லி மாத்திரைகளால் கட்டுப்படுத்த முடியாது.

இந்த நோயை குணப்படுத்த என்னால் முடியும் எனத் தனி நபர்களால் கூறப்பட்டாலும் விஞ்ஞான ரீதியாக அவ்வாறு முடியாது. சீன அதிகாரிகளும் அதற்கு இன்னமும் உரிய மருந்தைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளனர்.

நான் இலங்கை கடைகளில் லேபல் மாற்றி விற்பனை செய்யப்படும் மருந்துகளை அவதானித்தேன். அவற்றை நம்பி ஏமாற வேண்டாம். - என்றார். (எ)

## மெய்வன்மைப் போட்டியும் மைதான திறப்பு விழாவும்

கொடிகாமம்,பெப்.7



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், மைதான திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் ஐ. தேவராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.க.சண்முகசுந்தரம், பொது சுகாதார பரிசோதகர் க.கிருஷ்ணரட்சகன், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்

சுப்பையா, கந்தையா, இராமலிங்கம் ஆகிய இல்லங்களுக்கிடையிலான போட்டியில் சுப்பையா இல்லம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. (ஐ-159)

## விளையாட்டுப் போட்டிகள்



சாவகச்சேரி.பெப். 7

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க அங்கத்தவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மைதானத்தில் நடைபெற்றன.

40 வயதுக்கு உட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவாகவும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் எட்டாம் திகதி நடத்தப்படவுள்ள மகளிர் தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மெய்வன்மைப் போட்டிகள்



மன்னார்.பெப்.7

மன்னார் தாழ்வுபாடு புனித வளனார் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஸ்ரான்லி டிமெல் லெம்பேட் தலைமையில் நடைபெற்ற போட்டியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விச் செயலக பிரதிநிதி கந்ததாசன், மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் பிறட்லி, கௌரவ விருந்தினர்களாக கோட்டக் கல்வி பணிப்பாளர் கிறிஸ்ரிராஜ், தாழ்வுப்பாடு பங்கு தந்தை ஜேசுராஜ் மற்றும் சட்டத்தரணி சர்மிலன் பயஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56-60)

+++

கரணவாய்,பெப்.7

வல்வெட்டி இ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வித்தியாலய மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பழைய மாணவருமான சுந்தரம் டிவகலாலா கலந்துகொண்டார்.

இதில் 330 புள்ளிகளைப் பெற்ற கம்பர் இல்லம் முதலாமிடத்தையும், 323 புள்ளிகளைப் பெற்ற வள்ளுவர் இல்லம் இரண்டாமிடத்தையும், 313 புள்ளிகளைப் பெற்ற நாவலர் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.



# திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்



## கன்னி



கன்னி ராசிக்காரர்களுக்கு அர்த்தாஷ்டம சனி முடிந்து, சனி பகவான் ஐந்தாம் இடத்துக்கு வருகிறார். அஷ்டம் என்றால் எட்டு, அர்த்தாஷ்டமம் என்றால், எட்டில் பாதி நான்கு என்று பொருள். அர்த்தாஷ்டம சனியாக நான்குமிடத்தில் இது நாள் வரை இருந்து வந்தார். ஏழரைச்சனியில் பாதி அளவு துன்பத்தை இத்தனை நாள்களாக கன்னி ராசிக்காரர்களுக்குத் தந்து வந்தார். இப்போது அவர் ஐந்தாம் இடத்துக்கு வருகிறார். ஐந்தாமிடத்து சனி பகவான் சிறப்பான பலன்களை அள்ளித் தருவார்.

கன்னி ராசிக்குப் பூர்வ புண்ணியஸ்தானமான மகர ராசியில் சனி பகவான் இருப்பதால், உங்களுக்குச் சேர வேண்டிய நற்பலன்களை எந்தவிதத் தடையும் தாமதமும் இன்றி வழங்குவார் என்பது ஜோதிட விதி.


கடந்த மூன்று ஆண்டுகளாக வேலை, தொழில், ஜீவனம் ஆகிய அமைப்புகளில், கன்னி ராசிக்காரர்களுக்கு நிம்மதியான சூழ்நிலை நிலவவில்லை. எந்த ஒரு காரியத்தில் இறங்கினாலும் தடைகள், தாமதங்கள் என்கிற நிலைகளே நீடித்து வந்தன. அவை எல்லாம் விலகி, இப்போது புத்துணர்ச்சியுடன் உங்களின் தொழிலில் இறங்கி வெற்றி பெறக்கூடிய முன்னேற்றகரமான நிலையைக் காண்பீர்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளாக வருமானம் பெரிய அளவில் இல்லை. ஆனால், வாங்கிய கடனுக்கும் வந்த வருமானத்தில் பெரும்பகுதியை வட்டியாகக் கட்டுவதற்குமே சரியாக இருந்தது. கடனுக்கு அதிக சதவிகித வட்டியினால், பணத்தை மிச்சம் மீதம் என எடுத்து வைக்க முடியாத சூழ்நிலையே கடந்த 3 ஆண்டுகளாக நிலவி வந்தது. இதனால் தீராத மன உளைச்சலுக்கு

**திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கியப் பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்றே சனிப்பெயர்ச்சி நடைபெறும் எனக் கூறப்பட்டுள்ளது**

நீங்கள் ஆளாகி வந்தீர்கள். இப்போது அந்த நிலைமைகள் மாறி பழைய கடன்களை அடைப்பீர்கள்.

5ஆம் இடத்தில் ஆட்சியாக வருகின்ற சனி பகவான் உங்களுக்கு இப்போது பலவிதமான யோக பலன்களைத் தரக் காத்திருக்கிறார். திருமணமாகாமல் பல இடங்களில் வரன் பார்த்தும் திருமணம்



### பதவி, புகழ், அந்தஸ்து பெறப்போகின்றீர்கள்!

தள்ளிப் போய்க்கொண்டிருந்த பெண்களுக்குத் திருமணம் கைகூடி வரும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

இதுவரை வேலை கிடைக்காமல் இருந்த இளைஞர்களுக்கு, ஒரு தொழிலைத் தொடங்கி அதை நல்ல முறையில் நடத்த முடியாமல் சிரமப்பட்டு வந்தவர்களுக்கெல்லாம் அந்த நிலைமைகள் இப்போது மாறும். அதற்கு பதிலாக நல்ல தொழில் வளமும், வேலை வாய்ப்பும் கிடைக்கக்கூடிய ஒரு காலகட்டமாக இந்த சனிப்பெயர்ச்சி அமையும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலக்குகளைச் சரியாகச் செய்து பணியில் உயர்வையும் பாராட்டையும் பெறுவார்கள். குழப்பமான நிலை எல்லாம் மாறி, நல்ல இடத்தில் வேலை பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பணி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும்.

பொது வாழ்க்கையில் இருக்கக்கூடிய தன்னார்வத் தொண்டர்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் இந்த சனிப் பெயர்ச்சியின் வாயிலாக நல்ல பதவி, புகழ் சமூகத்தில் அந்தஸ்து ஆகியவை கிடைக்கும்.

பூர்வீகச் சொத்தில் உங்களுக்குச் சேரவேண்டிய பங்கைக் கேட்டுப்பெறுவீர்கள். அண்ணன், தம்பி பங்காளிகளுக்கிடையே இருந்து வந்த வீண் சச்சரவுகள், சண்டைகள் எல்லாம் அகன்று ஒரு சுமுகமான சூழ்நிலை இப்போது ஏற்படும். தாயாருடன் பிணக்கில் இருந்த மகள்களுக்கு தாயாரின் பரிபூரண அன்பு கிடைக்கும்.




## ஆனந்தம் கொள்வோம்!

ஒன்று மட்டும் நிச்சயம்... இன்னொருவரின் சந்தோஷத்துக்காக விட்டுக் கொடுப்பதாகச் சொல்வது வெறும் கண்துடைப்பு. உண்மையில் இன்னொருவருடைய மகிழ்ச்சி உங்களுக்கு வேதனை தரும் என்றால், அதைச் செய்ய விரும்புவீர்களா? அடுத்தவர் மகிழ்ச்சியில் உங்களுக்கு மகிழ்ச்சி என்பதால்தானே அவர் விருப்பப்படி நடக்க முனைகிறீர்கள்?

சமூகத்தில் நீங்கள் தனி ஆள் அல்லர். எத்தனையோ பேர் உங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க, சாதுர்யமாக நீங்கள் பலவிதமானக் காய்களை நகர்த்துகிறீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியை உத்தேசித்துதான் அடுத்தவரின் மகிழ்ச்சியை நீங்கள் முன்வைக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் ஒரு பேரம் அது.

தெளிவான முடிவு எடுக்கமுடியாத போதெல்லாம் பொறுப்பை மற்றவர் தலையில் கட்டிவிட்டு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக உங்கள் மனம் உங்களை ஏமாற்றுகிறது. அதுதான் விஷயம்!

உங்கள் மகிழ்ச்சி எது என்று தேர்வு செய்யும் உரிமை உங்களிடம்தான் இருக்கிறது.

உங்கள் சந்தோஷம் எது? அது உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், அதன்படி செய்யுங்கள். அல்லது அடுத்தவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், அதன்படி முடிவு எடுங்கள்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைவிட, அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பதுதான் உங்கள் வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கும். ஆனால், எந்தவிதமான முடிவு எடுத்தாலும், அதற்கு ஒரு பின்விளைவு உண்டு என்பதை மறக்காதீர்கள். எது என்னவாக இருக்கும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை உங்களுக்கு வேண்டும். உங்களுக்கு ஏற்றதொரு பின்விளைவு கிடைக்க வேண்டும் என்றால், அதற்கேற்ற செயலில் இறங்குங்கள். முடிவு செய்துவிட்டால், எப்படிப்பட்ட பின் விளைவு வந்தாலும், அதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளத் தயாராகுங்கள். வாழ்க்கையை ஒரு நீரோட்டம் போல் வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் சரி, இது தப்பு என்று எதனுடனாவது உங்களைப் பிணைத்துக் கொண்டீர்கள் என்றால், பாறை போல் இறுக்கமாகிவிடுவீர்கள்.

எந்தக்கருத்துடனும், எந்தத்தீர்மானத்துடனும், எந்த உணர்ச்சியுடனும் உங்களை உறைய வைத்துக்கொள்ளாதீர்கள். பாறை போல் இறுக, இறுக... புதிய அனுபவங்களை எதிர்கொள்ளும் திறனை இழந்துவிடுவீர்கள். உங்களை நீங்களே ஊனப்படுத்திக் கொண்டவராகி விடுவீர்கள். அதேபோல், சந்தோஷம் இல்லாமல் எதையும் செய்யாதீர்கள். ஆனந்தமாக இல்லாதிருப்பது மாபெரும் குற்றம். எதைச் செய்தாலும் அது உங்கள் ஆனந்தத்தின் வெளிப்பாடாக அமைந்துவிட்டால், இது சரியா, அது சரியா என்ற சந்தேகங்களே எழமாட்டா.

## நாளை 08.02.2020

சனிக்கிழமை

**விகாரி - தை 25**

திதி: சதுர்த்தி பி.ப. 03.35 வரை
நட்சத்திரம்– சித்தம் மு.இ. 10.02 வரை

**ராகுகாலம்- 09.35 - 11.05 வரை**
**சுப நேரம்- 03.35 -05.05 வரை**
**எமகண்டம்- 6.35 - 8.05 வரை**

**தைப்பூசம்**

*சாரதி அனுமதிப்பத்திரம்*

# மருத்துவச் சான்றிதழ்கள் அரச மருத்துவமனைகளில்

யாழ்ப்பாணம், பெப். 7
சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான அனைத்து மருத்துவச் சான்றிதழ்களையும் அரச மருத்துவமனைகளில் பெற்றுக் கொள்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்கள் அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்ட விடயம் அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் பிரதான மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்தத் திட்டத்தை செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# விக்னேஸ்வரன், சுரேஸ் இடையே ஞாயிறன்று தேர்தல் ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், பெப். 7
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு இடையிலான தேர்தல் கூட்டு ஒப்பந்தம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் ஒப்பந்தத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவது, ஆசணப்பங்கீடு, தேர்தலின் நிலைப்பாடு என்பனவற்றுடன் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பிலும் பரிசீலனை செய்யப்படவுள்ளது. இதேநேரம் குறித்த கூட்டில் சிறீக்காந்தா மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோரின் கூட்டிணைவு தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்படும் அதேநேரம் இணைவுக்கான பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் தெரியவருகின்றது.

(ம-105)

# பேராசிரியர் கந்தசாமிக்கு மற்றுமொரு பதவி நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியான வாழ்நாள் பேராசிரியர் கந்தசாமிக்கு எதிர்வரும் மே 7ஆம் திகதி வரை பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான்காவது தடவையாக இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டின்16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 20, உப பிரிவு 4(6)க்கு அமைவாக நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரினால் சிறப்பு அரசிதழ் கட்டளைக்கு அமைவாக இன்று முதல் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பதவிக்காக வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமிக்கு வழங்கப்படும் மாதாந்தப்படி, அலுவலகம், மற்றும் ஆளணி, குறித்தொதுக்கப்பட்ட வாகனம், சாரதி, எரிபொருள் உட்பட சகல வசதிகளும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி முதல் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், முன்னாள் அரதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திடீரென பதவி நீக்கப்பட்டதன் பின்னர் மே மாதம் முதல் வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி உயர்கல்வி அமைச்சரால் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தரின் கடமைகளையாற்றும் வகையில் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

*யாழ். பொதுநூலகத்தில்*

# ஒரு லட்சம் நூல்கள் தனி மண்டபத்தில்!

யாழ்ப்பாணம் பிரதான நூலகத்தில் கனேடியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஒரு லட்சம் புத்தகங்கள் அடங்கிய வகையிலான ஓர் தனித் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தொகுதிக்காக கனேடியப் புலம்பெயர் உறவுகளும் கணிசமாக அளவு பங்களிப்பை வழங்கவுள்ளனர். இதற்கான பராமரிப்பையும் அவர்களே மேற்கொள்வார்கள். இதற்கான ஒப்புதல் நேற்றைய மாநகர அமர்வில் கோரப்பட்ட நிலையில் அது சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ம-105)

## 100 கிலோ...

நிலையில் கடத்தலுக்கு தயாராக இருந்த இந்தக் கஞ்சாப் பொதிகளை வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்துக் கைப்பற்றினர். சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வயது 34. சந்தேகநபர் சங்கானை மதுவரி திணைக்களத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். (ம-26)

## திருமலையிலும்...

அரச அதிபரான அருந்தவராஜா பதில் மாவட்டச் செயலராகக் கடமையாற்றிவருகிறார். இந்த நிலையில் புதிய மாவட்டச் செயலராக ருவான் குலதுங்க விரைவில் கடமைகளை பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# தமிழர்களைத் தனிமைப்படுத்தும் அரசியல் ஒருபோதும் வேண்டாம்!

## ஜே.வி.பி இடித்துரைப்பு

கொழும்பு, பெப். 7
தமிழர்களைத் தனிமைப்படுத்தும் வகையில் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. தமிழர்களைத் தனிமைப்படுத்தும் அரசியலைச் செய்யவேண்டாம் இவ்வாறு குற்றஞ்சாட்டினார் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகக்கூறி வடக்கில் முப்படையினர் மூலம் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பேருந்து முதல் அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

நாட்டில் போதைப்பொருள் கடத்தப்படும் இடங்கள் எங்கேயோ உள்ளன. போதைப்பொருள் பண்டாரகமவில் அகப்படும் போது வவுனியாவில் சோதனை செய்கின்றனர். தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே இதனைப் பார்ப்பார்கள்.

அத்துடன், கடந்த காலத்தில் சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுவந்த நிலையில் இம்முறை சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை. இவ்வாறு தமிழர்களை தனிமைப்படுத்தும் அரசியலை செய்துகொண்டு செல்லும் தருணத்தில், வடக்கில் சோதனைச் சாவடிகளையும் அமைத்து அவர்களை மேலும் சிரமங்களுக்கு உள்ளாக்க வேண்டாம்'- என்றார். (ம)

## கோத்தாவின்...

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்த அராஜக ஆட்சிக்கு நாட்டு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறைப் பொதுத் தேர்தலிலும் மக்கள் விடக்கூடாது' எனவும் அவர் வலியுறுத்தினார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் எனக்கு அனுப்பப்பட்ட அழைப்புக்கிணங்கவே இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டேன். ஆனால், இந்த நிகழ்வில் நான் பங்கேற்றதை ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பல தரப்பினர் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். இந்த விமர்சனங்கள் அனைத்தும் எனக்குத் தூசி.

ராஜபக்சக்களின் காலில் விழுவதோ அல்லது அவர்களுடன் இணைந்து பயணிப்பதோ எனது நோக்கமல்ல. எனது தந்தை, தாய் வீடான சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதே எனது நோக்கமாகும். அக்கட்சியின் பொறுப்புக்களிலிருந்து ராஜபக்சக்களின் தலையாட்டிப் பொம்மைகளினால் நான் நீக்கப்பட்டாலும் அக்கட்சியிலுள்ள பெரும்பாலானோர் எனக்கு ஆதரவாகவே இருக்கின்றார்கள். பொம்மைகளின் கைகளிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நான் மீட்டே தீருவேன்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்தே போட்டியிட வேண்டும். அக்கட்சியின் மகிமை சிதைக்கப்பட்டாலும் அதற்குப் புத்துயிர் கொடுப்பது எனது தலையாய கடமையாகும்' -என்றார். (ம-22)

## புத்தாண்டுக்கு...

னர்.பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதியன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. இந்த நிலையில் ஏப்ரல் இறுதி வாரத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அது ஏதேனும் ஒரு விதத்தில் தமது கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியும் பச்சைக் கொடி காட்டியுள்ளது என தெரியவருகின்றது.

**அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நான்கரை ஆண்டுகளுக்கு பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம்** நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருக்கின்றது. எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் முன்கூட்டியே கலைக்க முடியும் என்றும், இதன்பிரகாரம் அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனவும் அரசியல் களத்தில் பேசப்படுகின்றது. (ம-44)

## தூக்கிட்டு...

சத்தியேஸ்வரன் (வயது -36) என்ற நபர் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார். அவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் முன்னதாகவே அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இறப்புத் தொடர்பான விசாரணைகளை இறப்பு மருத்துவ அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1645 | சீட்டிழுப்பு திகதி 06.02.2020
வெற்றி இலக்கங்கள் 07 21 31 39 R
அடுத்த செவ்வாய்க் கிழமைக்கான ஜக்பொட் ரூ.46, 116, 984/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.02.2020 | வெற்றி வாரம் 2761 | வர்ணம் கபிலம்
தனுசு
வெற்றி இலக்கங்கள் 14 41 46 51
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,858,146/=
07.02.2020ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 875
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,144,515/-
வெற்றி இலக்கங்கள் 09 13 17 22 H



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் ஏற்படும் உற்சாகத்தால் சந்தோஷமான முகத்தோற்றத்தை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் வளர்ச்சி புதிய அனுகூலம் தரும். நிலுவைப் பணம் வசூலாகும். விவகாரத்தில் சுமூக தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** நண்பரின் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளச்சி பெற கூடுதல் உழைப்பு அவசியம். பணச்செலவு அதிகரிக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தாமதமான காரியம் வளர்ச்சி நிலையை அடையும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் அனுகூலம் கிடைக்கும்.

**கடகம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைத்து செயல்படுவது நல்லது. சகதொழில் சார்ந்தவரிடம் சச்சரவு கூடாது. சீரான பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**சிம்மம்:** உண்மை, நேர்மையை மதித்து செயல்படுவீர்கள். எளிதான பணி கூட பல மடங்கு நன்மையை தரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**கன்னி:** உங்களை அவமதித்தவர்கள் அன்புடன்பழகும்சூழல்உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருளை வாங்குவார்கள்.

**துலாம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உதவி செய்வது போல் நடித்து ஏமாற்றுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க நிதான அணுகுமுறையை பின்பற்றுவது பயனளிக்கும்.

**தனுசு:** சில நன்மை எளிதில் வந்து சேரும். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு பலமடங்கு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** இனிய நிகழ்வுகள் மனதில் உற்சாகம் தரும். அனைத்து செயல்களிலும் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கை அடைவீர்கள்.


**கும்பம்:** சிலர் பயன் தராத ஆலோசனையை சொல்வர். தொழில், வியாபாரத்தில் அயராத முயற்சியினால் உற்பத்தி, விற்பனையை உயர்த்தலாம்.

**மீனம்:** உங்களின் அபார ஆற்றலை கண்டு சிலர் பொறாமை கொள்வர். சாந்த குணத்துடன் செயல்படுவது நல்லது. கூடுதல் உழைப்பினால் தொழில், வியாபாரம் சீராகும்.

# தப்பினார் டிரம்ப்

நியூயோர்க், பெப்.7

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பை பதவி நீக்கம் செய்வது தொடர்பான தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு செனட் சபையில் தோல்வியடைந்ததையடுத்து டிரம்ப் இரு குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.



அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் டிரம்ப் மீண்டும் போட்டியிட்டால், அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ஜோ பிடன் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழலில், தனது தேர்தல் வெற்றியை உறுதி செய்வதற்காக ஜோ பிடனின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், அவர் மீது ஊழல் விசாரணை நடத்துமாறு உக்ரைன் அரசை டிரம்ப் வற்புறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜோ பிடனும், அவரது மகனும் உக்ரைனில் மேற்கொண்டுவரும் தொழில் தொடர்பாக அவர்கள் மீது ஊழல் விசாரணை நடத்த வேண்டுமென்று அந்த நாட்டு அரசுக்கு டிரம்ப் நெருக்கடி கொடுத்தார் என எழுந்த குற்றச்சாட்டு, அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த விவகாரத்தில், டிரம்ப் அதிகார முறைகேட்டில் ஈடுபட்டார் எனவும், இதுதொடர்பான விசாரணையில் நாடாளுமன்றத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டி, அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான இரு தீர்மானங்களை பிரதிநிதிகள் சபையில் ஜனநாயகக் கட்சியினர் கடந்த டிசெம்பர் மாதம் நிறைவேற்றினர்.

செனட் சபையில் இது தொடர்பான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது. அதில் முதல் குற்றச்சாட்டான அதிகார முறைகேடு மீதான வாக்கெடுப்பில் டிரம்ப்புக்கு ஆதரவாக 52 உறுப்பினர்களும், டிரம்ப்புக்கு எதிராக 48 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

டிரம்ப்பை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால், அவருக்கு எதிராக 66 உறுப்பினர்கள் வாக்களித்திருக்க வேண்டும். அதனால் முதல் குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவது குற்றச்சாட்டு மீதான வாக்கெடுப்பிலும், 53க்கு 47 என்றே உறுப்பினர்கள் வாக்களிக்க இதில் இருந்தும் டிரம்ப் விடுவிக்கப்பட்டார்.

100 இடங்களைக் கொண்ட அமெரிக்க செனட் சபையில், டிரம்ப்பின் குடியரசுக் கட்சிக்கு 53 உறுப்பினர்களும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு 47 உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்த இரண்டு குற்றச்சாட்டுகளில் இருந்து டிரம்ப் விடுவிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றால் டிரம்ப்பின் குடியரசுக் கட்சியின் 20 உறுப்பினர்கள் டிரம்ப்புக்கு எதிராக வாக்களித்திருக்க வேண்டும். (ஏ)

## பனிச் சரிவில் சிக்கி 38 பேர் உயிரிழப்பு

இஸ்தான்புல், பெப்.7

துருக்கியின் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட இரு பனிச்சரிவுகளில் சிக்கி குறைந்தது 38 பேர் உயிரிழந்தமையை அடுத்து மீட்பு நடவடிக்கை அந்த நாட்டு அரசால் நிறுத்தப் பட்டுள்ளது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளனர். அதற்கு முதல் நாளான செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மற்றொரு பனிச் சரிவில் சிக்கியவர்களை மீட்க முயன்றபோது அந்தப் பகுதியில் மீண்டும் பனிச் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில், அங்கு மூன்றாவது முறையாகவும் பனிச்சரிவு இடம்பெற வாய்ப்புள்ளதால் குறித்த மீட்பு நடவடிக்கை இடைநிறுத்தப் பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் பொலிஸ் அதிகாரிகள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் தன்னார்வ மீட்புப் படையினர் அடங்குகின்றனர் என துருக்கியின் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என நம்பப்படுகின்ற நிலையில், சம்பவத்தில் 75 பேர் காயமடைந்துள்ளனர். (ஏ)



# ஓடுபாதையில் இருந்து விலகி விமானம் விபத்து

*3 பேர் உயிரிழப்பு; 173 பேர் காயம்*

இஸ்தான்புல், பெப்.7

துருக்கி, இஸ்தான்புல்லின் சபிஹா கோக்கென் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விமானம் ஒன்று ஓடுபாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. அதில் 3 பேர் உயிரிழந்தனர். 173 பேர் காயமடைந்துள்ளனர்.

ஓடு பாதையை விட்டு விலகி வயலில் வீழ்ந்தே விமானம் விபத் துக்குள்ளாகியுள்ளது. விமானம் மூன்று துண்டுகளாக உடைந்துள்ளது. விபத்தை அடுத்துத் தீப்பற்றிக் கொண்ட விமானத்தின் விரிசல்கள் ஊடாக விமானத்தில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் இரண்டு விமானிகளும் உள்ளடங்கியுள்ளனர் என்று தெரிவித்த அதிகாரிகள் அவர்களது நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பொகசஸ் ஏர்லைன்ஸ் நிறுவ னத்துக்கு சொந்தமான போயிங்737 ரக விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விமானம் மேற்கு துருக்கிய நகரமான இஸ்மிரில் இருந்து இஸ்தான்புல்லின் சபிஹா கோக்கென் விமான நிலையத்துக்கு வந்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது. (ஏ)



# வெடிகுண்டு வதந்தியால் 13 மாணவர்கள் உயிரிழப்பு

நைரோபி, பெப்.7

மேற்கு கென்யாவில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 13 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

ஆரம்பப் பாடசாலையில் வெடிபொருள் உள்ளது என்ற தகவல் பரவியதை அடுத்தே இந்த நெரிசல் ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பலர் பாடசாலையில் இருந்து வெளியேற முயன்ற போது அதில் மாணவர்கள் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

இந்த நெரிசலால் காயமடைந்த நிலையில் 39 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் வெடிகுண்டு இருப்பதாகப் பரவிய தகவல் பொய்யானது என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. பாடசாலைக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)



# நான்காம் வகுப்புத் தேர்வு எழுதிய 105 வயது மூதாட்டி

சென்னை, பெப்.7

கல்வி மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக 105 வயது மூதாட்டி ஒருவர் 4 ஆம் வகுப்புக்கு நிகரான தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

இந்தியாவின் கேரள மாநிலம் கொல்லம் நகரில் வசிப்பவர் பாகீரதி அம்மாள். இவர் 3 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது அவரது தாயார் இறந்தார். தனது உடன்பிறந்தோரை கவனித்துக் கொள்வதற்காக படிப்பை பாதியில் கைவிட்டு, வீட்டுப் பொறுப்பை கவனிக்கத் தொடங்கினார். கல்வியை தொடர முடியவில்லை என்றாலும், அதன் மீதான ஆர்வம் மட்டும் அவரது மனதை விட்டு நீங்கவில்லை.

திருமணம் ஆகி 6 குழந்தைகளுக்கு தாயான அவர், தன்னுடைய 30ஆவது வயதில் கணவரை இழந்தார். குழந்தைகளை வளர்க்கும் முழுப் பொறுப்பும் அவரிடம் வந்து சேர்ந்தது. பிள்ளைகளை வளர்த்து, திருமணம் செய்து வைத்த பிறகும் பாகீரதி அம்மாளுக்கு கல்வி மீதான ஆர்வம் மட்டும் தீரவில்லை.

கடந்த ஆண்டு கொல்லத்தில் மாநில எழுத்தறிவு இயக்கத் திட்டத்தின்கீழ் தேர்வு நடைபெற்றது. அதில் பாகீரதி அம்மாள் 4 ஆம் வகுப்புக்கு நிகரான தேர்வெழுதத் தேர்வு செய்யப்பட்டார். வயது மூப்பு காரணமாக தேர்வுகளை எழுத சிரமப்பட்ட போதிலும், சுற்றுச்சூழல், கணிதம், மலையாளப் பாடங்களின் தேர்வை மனம் தளராமல் எழுதி முடித்தார். இந்தத் தேர்வின் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. மொத்தம் 275 மதிப்பெண்ணுக்கு 205 மதிப்பெண் பெற்று, பாகீரதி அம்மாள் 4 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். கணிதப் பாடத்தில் 100 சதவீத மதிப்பெண்களைப் பெற்றார். அந்த நாட்டில் இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மிக வயதான நபர் என்ற பெருமையை பெற்றுள்ள பாகீரதி அம்மாளை, கேரள மாநில எழுத்தறிவுப் பணி இயக்குநர் பி.எஸ். ஸ்ரீகலா நேரில் சென்று சந்தித்து பாராட்டு தெரிவித்துள்ளார். (ஏ)

தொழில் நுட்பவியல் கல்லூரி
யாழ்ப்பாணம்
சரஸ்வதி சிலை
திறப்புவிழா
கல்லூரியின்
அறுபதாவது
ஆண்டு விழாவினை
முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையினை
இன்று (07.02.2020) வெள்ளிக்கிழமை
முற்பகல் 11.35 மணிக்கு
திறந்துவைக்கப்பட உள்ளமையினால்
இக்கல்லூரியில் கற்று வெளியேறிய அனைத்து பழைய
மாணவர்களையும் விழாவில்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்,
தொழில் நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம்
அனுசரணை: Pirakanth Photo Copy Centre
55, Palay Road,
Thirunelvely Jaffna.

सत्यमेव जयते
இந்திய துணைத்தூதரகம்
யாழ்ப்பாணம்
மன்னார் மாவட்ட மக்களுக்கு
கொன்சிலர் சேவைகளை வழங்கல்
இந்திய யாழ்ப்பாண தூதரக குழு பின்வரும் நாளில் பொதுமக்களை மன்னார் மாவட்டத்தில் நேரடியாக சந்தித்து இந்திய வீசா, கொன்சிலர் சேவைகள் மற்றும் புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களையும் பிரச்சினைகளையும் கேட்டு அறிந்து தீர்த்து வைக்க வருகின்றது. பொதுமக்கள் இக்குழுவை முன்பதிவின்றி சந்தித்து தீர்வுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
நாள்
08.02.2020 (சனிக்கிழமை)
இடம்
Ahash Hotel மன்னார்
நேரம்
மு.ப 09.30 - 12.30 மணி
தொலைபேசி இலக்கம்
077 780 0201
மேலதிக தகவல்களுக்கு
தொலைபேசி இலக்கம்: 021 222 0505/04
மின்னஞ்சல் : cons.jaffna@mea.gov.in

# அதிவேக ரயில் தடம்புரண்டு இத்தாலியில் இருவர் சாவு

ரோம், பெப்.7

இத்தாலியின் லோடி மாகாணத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை அதிவேக ரயில் ஒன்று தடம் புரண்டதில் இருவர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாலிக்கு வடக்கே மிலனுக்கு அருகிலுள்ள காசல் பஸ்டர்லெங்கோ என்ற நகரிலேயே இந்த விபத்து நடந்துள்ளது. இந்த விபத்துக் காரணமாக 28 பேர் காயமடைந்துள்ளனர். ரயிலின் இரண்டு நடத்துநர்கள் உயிரிழந்துள்ளனர் என்று இத்தாலிய தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். விபத்தால் உண்டான சேத விவரங்கள் தொடர்பான மதிப்பீட்டு பணிகளை அவசரக் குழுக்களைச் சேர்ந்தவர்களும், தீயணைப்பு வீரர்களும் முன்னெடுத்துள்ளனர். (ஏ)

ஏழாலை தெற்கு களபாவோடை
வசந்த நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்
மஹோற்சவம் -2020
இரதோற்சவம் 08.02.2020 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறும்.
நிகழ்வுகள் யாவும் ஓம் TV வாயிலாக நேரலையாகக் காண்பிக்கப்படும்.
ஏழாலை தெற்கு
வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்,
களபாவோடை, வசந்தபுரம்.
(CS/31076)(11,17)

சேவை நலன் பாராட்டு மற்றும் மணிவிழா வாழ்த்து
யா/மீசாலை
விக்னேஸ்வர மகாவித்தியாலயம்
மீசாலை
எமது பாடசாலையில் இருந்து
08.02.2020 ஓய்வுபெறும் ஆசிரியை
திருமதி கமலாம்பிகை
சந்திரநாதன்
(SLTS 1)
Congratulations
சேவைக்காலம்:
• 1988-1992
யா/மந்துவில் அ.த.க.பாடசாலை
• 1993-1994
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை.
• 1995-2010
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
• 2011-2020
யா/மீசாலை
விக்னேஸ்வர மகாவித்தியாலயம்.
பல வளங்களோடு பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர் : பாடசாலை சமூகம்
யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், மீசாலை



A member of the IDOL family
UV Water Solution
water science technologies
Right solution for water issues
நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான
தீர்வுகளுக்கு
T.P:+94775092737



### சமநிலை தகர்ப்பில்

# மகுடம் சூடியது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் காணப்பட்டது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.பெப்.7

யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வர விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவறெட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

★ ★ ★

யாழ்ப்பாணம்.பெப்.7

முல்லைத்தீவு மாவட்ட காந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் முல்லையின் மன்னார்கள் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## கரப்பந்தாட்ட தொடர் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்.பெப்.7

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய ஏ பிரிவு, பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரவங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்ஒளியில் இடம் பெறவுள்ளது.

பி பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் நீர்வேலி காமாட்சிஅம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடாந்து இடம் பெறும் ஏ பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால்மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இன்றைய இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினாராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், ல.அனுரகாந்தன், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலிகிழக்கு பிரதேசசபை உபதவிசாளர் தி.கமலநாதன், நல்லூர் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ர.யுவராஜ்,விவேகானந்தா சனசமூக நிலைய தலைவர் சி.சிறிராகவன்,கிருபா சாரதி பயிற்சி கல்லூரியின் உரிமையாளர் கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

## கனவான் விருதை தனதாக்கியது வசந்தபுரம் விண்மீன் வி.க. அணி

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்ளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வசந்தபுரம் விண்மீன் விளையாட்டுக்கழகம் 2020ஆம் ஆண்டுக்கான கனவான் விருதை தனதாக்கிக் கொண்டது. (23)



## வர்ண இரவு நிகழ்வு

சாவகச்சேரி, பெப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கடந்தாண்டு நடைபெற்ற வலய, மாகாண மற்றும் தேசிய நிலை விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி சாதனை படைத்த மாணவர்களுக்கான மதிப்பளிக்கும் வர்ண இரவு நிகழ்வு எதிர்வரும் திங்கட் கிழமை பி.ப 2.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கணக்காளர் திருமதி சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

# யாழ். பிரதேச செயலக விளையாட்டு ஜெட்லைனஸ் வி.க. அணி சம்பியன்



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஜெட்லைனஸ் விளையாட்டுக் கழக அணி 18 தங்கப் பதக்கம், 7 வெள்ளிப் பதக்கம், 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற முதலாமிடத்தையும், வசந்தபுரம் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 9 தங்கப்பதக்கம், 16 வெள்ளிப் பதக்கம், 4 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும்,கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் 8 தங்கப் பதக்கம், 5 வெள்ளிப்பதக்கம், 4 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (23)

# உபகரணங்கள் வழங்கி வைப்பு

மன்னார், பெப்.7

மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படவுள் மன்னார் பிறிமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் பங்குபற்ற விருக்கும் மன்னார் பீனிக்ஸ் அணியில் விளையாடவுள்ள கால்பந்தாட்டவீரர்களுக்கான கால்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் உரிமையாளர் சட்டத்தரணி டினேஸன் தலைமையில் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

அதே நேரத்தில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான இலவச கால்பந்தாட்டப் பயிற்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (56)



# முல்லை – கிளிநொச்சி இறுதியில் பலப்பரீட்சை





யாழ்ப்பாணம்,பெப்.7

வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான 13 வயதுப் பிரிவினருக்கான ஒருநாள் இன்னிங்ஸ் துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8மணிக்கு இடம் பெறவுள்ளது.

இறுதீயாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதவுள்ளது. (23)

## பெண்களுக்கான எல்லே தொடரில்;

# தங்கம் வென்றது சிறிகலைமகள்



நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான எல்லே தொடரில் சிறிகலை மகள் விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்றுமுன்தினம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய துடுப்பாட்ட மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே போட்டி இறுதியாட்டத்தில் சிறி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி எதுவித ஓட்டங்களையும் பெறவில்லை. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிகலைமகள் விளையாட்டுக் கழக அணி 15 பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற்றது. (23)

## ஆர்ச்சருக்கு காயம்

ஆர்ச்சரின் முழங்கையில் முறிவு ஏற்பட்டுள்ளதால் இலங்கை தொடர் மற்றும் ஐ.பி.எல். தொடரில் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜாப்ரா ஆர்ச்சர். தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது அவரது வலதுகைமுழங்கையில் காயம் ஏற்பட்டது.

இதனால் அவர் 2ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. தொடர்ந்து வலி இருந்ததால் 3ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியிலும் விளையாடவில்லை.

அவரது காயம் இன்னும் குணமாகததால், அவர் இலங்கை தொடர், ஐ.பி.எல். தொடரில் விளையாடமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அவரை ஏலம் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி பிறிமியர் லீக் 'ஏலம்' நாளைமறுதினம்

சாவகச்சேரி பெப்.7


தென்மராட்சி பிறிமியர் லீக் 2020க்கான அறிமுக விழாவும் வீரர்கள் ஏலமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி விநாயகர் திருமண மண்டபத்தில்க. அன்ரன் தேவகுமரர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அனுசரணையாளர்கள், அன்பளிப்பாளர்களை அறிமுகம் செய்தலும் கௌரவித்தலும் இடம்பெறும்.


# கரம், சதுரங்க போட்டிகள் நாளை, நாளைமறுதினம்

சாவகச்சேரி, பெப்.7

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கரம் மற்றும் சதுரங்க போட்டிகள் நாளை, நாளை மறுதினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த அணிகள் மற்றும் தனிநபர்கள் முற்பகல் 9 மணிக்கு முன்னர் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)








### கொரோனா வைரஸ் தாக்கம்

# ஒலிம்பிக் போட்டிக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நடப்பு ஆண்டில் டோக்கியோவில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் பாதிப்படையலாம் என ஒலிம்பிக் ஏற்பாட்டுக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோசிரோ முட்டோ தெரிவித்துள்ளார். எனினும் அதனை பிற்போடும் நோக்கம் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி வருவதால் இன்னும் 170 நாள்களில் ஒலிம்பிக் போட்டிகளுக்கான முன்னேற்பாடுகள் குறித்து கரிசை கொண்டுள்ளோம். ஒலிம்பிக் போட்டிகளை நோக்கிய உத்வேகத்துக்கு கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிப்பு ஏற்படாலம் என்று ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன். இந்த வைரஸ் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும். இதனால் ஒலிம்பிக் போட்டிகள் சிறந்த முறையில் நடத்த முடியும் என நம்புகின்றறேன் - என்றார்.

# இங்கிலாந்து - தென்னாபிரிக்கா 2ஆவது ஒருநாள் போட்டி இன்று

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்று முடிந்த 4 டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 3:1 என்ற நிலையில் கைப்பற்றியிருந்தது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டியை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி இன்று டர்பனில் இடம்பெறவுள்ளது.

தென்னாபிரிக்கா அணி தனது சொந்த மண்ணில் டெஸ்ட் போட்டியில் மிக மோசமான தோல்வியைத் தழுவியிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக ஒருநாள் போட்டியில் விளையாடி முதலாவது போட்டியை வெற்றி கொண்டது. 3 போட்டிகள் கொண்ட தொடரைக் கைப்பற்ற தென்னாபிரிக்கா அணி முழு முயற்சி செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இங்கிலாந்து அணியைப் பொறுத்த வரையில் முதலாவது ஒருநாள் போட்டியில் தோல்வியுற்றதால் பதிலடி கொடுக்கும் முனைப்பில் களமிறங்கும். இரு அணிகளும் துடுப்பாட்டம், பந்து வீச்சு சமபலத்துடன் காணப்படுவதால் போட்டி விறுவிறுப்பாகக் காணப்படும். இங்கிலாந்த அணியில் ஆர்ச்சர் அணியில் இல்லாதது அணிக்குப் பெரும் பின்னடைவே.

விசேட வகுப்புக்கள்
கணக்காளர் சேவை
(SLAcS)
9.00am-4.00pm
சனி (8/2)
IQ & Com
ஞாயிறு (9/2)
Acc & Cost
பதிவாளர் சேவை
பிரதி ஞாயிறு
9.30am - 3.30 pm
Law,MA உட்பட
சகல பரீட்சைக்கான
IQ & GK & L.S
சனி, ஞாயிறு 9.30-3.30
T.P 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில்
பஸ்நிலையத்திலிலிருந்து
100 m தூரத்தில்)

சிவப்பு மணல் விற்பனைக்குண்டு
பள்ள நிலங்கள் சீர்செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் ஏற்ற மிகச் சிறந்த சிவப்பு நிற மணல்மண் எம்மிடம் விற்பனைக்குண்டு. பளைப்பகுதி தொடக்கம் ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் யாழ் மாவட்டம் எப்பகுதியிலும் டிப்பர் மூலம் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டுவந்து எம்மால் இறக்கமுடியும்.
தொடர்புகளுக்கு:-
077 649 1027, 077 940 0963

# டெஸ்ட் போட்டியில் ஆடுவதே எனது கனவு

### நேபாள சுழற்பந்து வீச்சாளர் சந்தீப் லாமிச்சேன் தெரிவிப்பு

முதன்முறையாக நேபாளத்தில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்ற சந்தீப் லாமிச்சேன் டெஸ்ட் போட்டியில் விளையாடுவதே கனவு என்று தெரிவித்துள்ளார்.

நேபாள கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சந்தீப் லாமிச்சேன் நேபாள அணி மிகப்பெரிய அளவில் பிரபலம் அடையாத நிலையில், சந்தீப் லாமிச்சேன் ஐ.பி.எல். உள்பட முக்கியமான ரி-20 லீக்கில்விளையாடிவருகின்றார்.




நேபாளத்தில் முதன்முறையாக நேபாளம், ஓமன், அமெரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐசிசி கிரிக்கெட் உலக கோப்பை லீக் 2 போட்டிகள் நடைபெற்று வருகின்றது. முதல் ஆட்டத்தில் 10 ரன் வித்தியாசத்தில் ஓமானிடம் நேபாளம் அணி தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் விளையாடிய சந்தீப் லாமிச்சேன் டெஸ்ட் போட்டியில் விளையாடுவது தான் கனவு எனத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நேபாளம் அணிக்காக டெஸ்ட் போட்டியில் விளையாடவேண்டும் என்பதே எனவு கனவு. என்னுடைய ஒவ்வொரு சிறிய பங்களிப்பும் நேபாளம் அணிக்கு செல்வதாக இருக்கும். எனது கிரிக்கெட் வாழ்க்கை முடியும் இறுதி நாள் வரை, நேபாளம் அணிக்காக டெஸ்ட் போட்டியில் விளையாட வேண்டும் என்று விரும்புவேன்- என்றார்.


# பாகிஸ்தான் வீரர்கள் வெளிநாட்டு ரி- 20 களில் விளையாட அனுமதி

பாகிஸ்தான் தேசிய அணிக்காக விளையாடி வரும் வீரர்கள் மூன்று வெளிநாட்டு ரி-20 லீக்குகளில் விளையாடலாம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஐசிசியின் அனுமதி பெற்று ஏராளமான ரி-20 லீக்குகள் உலகளவில் நடைபெற்று வருகிறது. இந்தியாவில் நடைபெறும் ஐபிஎல், ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ், பாகிஸ்தானில் நடைபெறும் பாகிஸ்தான் சூப்பர் லீக், வெஸ்ட் இண்டீஸில் நடைபெறும் கரீபியன் பிரிமீயர் லீக் போன்றவை முக்கியமானது.

பாகிஸ்தான் தேசிய அணிக்காக விளையாடி வரும் வீரர்களுக்கு வெளிநாட்டில் நடைபெறும் ரி-20 லீக்கில் விளையாட கட்டுப்பாடு இருந்து வந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் சுப்பர் லீக்கை தவிர மூன்று ரி-20 லீக்கில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.